வார இதழ்

வெள்ளிதோறும்

# தமிழக அரசியல்

புதியதோர் உலகம் செய்வோம்

Vol - 14 Iss. - 24 விலை ரூ.20 www.tamilagaarasiyal.com 27.01.2022



# ரெய்டில் சிக்கிய வேது மாஜி!



5 மாநிலத் தேர்தல்...

# முந்தும் பா.ஜ.க.!

## சென்னை மேயர் பதவி; பட்டியலினத்தவருக்கு வாய்ப்பு...

# மாற்றங்களை கொண்டு வருமா இடஒதுக்கீடு...?

தமிழ்நாட்டில் விரைவில் நடைபெறவுள்ள நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் முக்கியமான மாநகராட்சிகள் பட்டியலினத்தவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 50 சதவீத இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், எந்தெந்த மாநகராட்சிகள் பட்டியலினத்தவருக்கும் பெண்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்ற அறிவிப்பு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. 1996ஆம் ஆண்டின் தமிழ்நாடு டவுன் பஞ்சாயத்து, முனிசிபாலிடி மற்றும் மாநகராட்சிகளுக்கான விதிகளின்படி இந்த அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, சென்னை மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சியின் மேயர் பதவிகள் பட்டியலினத்தைச் சேர்ந்த பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஆவடி மாநகராட்சியின் மேயர் பதவி பட்டியலின வேட்பாளருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடலூர், திண்டுக்கல், வேலூர், கரூர், சிவகாசி, காஞ்சிபுரம், மதுரை, கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய ஒன்பது மாநகராட்சிகள் பொதுப் பிரிவில் பெண்களுக்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேயர் பதவிக்கு, இதுவரை மூன்று முறை நேரடி தேர்தல் நடந்தது. தற்போது நடக்க உள்ள தேர்தலில், மேயர் மற்றும் துணை மேயர் பதவிக்கு, மறைமுக தேர்தல் நடக்க உள்ளது. பணிகள் மும்முரம்தேர்தல் நடத்துவதற்கான பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

அதன்படி, வார்டு வரையறை, வார்டு இட ஒதுக்கீடு, வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, ஓட்டுச்சாவடி ஒதுக்கீடு, ஓட்டுச்சாவடிகளுக்கான ஓட்டுப்பதிவு இயந்திரம் ஒதுக்கீடு போன்ற தேர்தலுக்கான ஆயத்த பணிகள் ஏறத்தாழ முடிந்துள்ளன.சென்னை மாநகராட்சியில் மண்டல வாரியாக 50 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதன்படி, 200 வார்டுகளில் 105 வார்டுகள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது. பெண்களுக்கான மண்டல வாரியான இடஒதுக்கீட்டை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில், மண்டல வாரியாக பெண்களுக்கு, இடங்களை ஒதுக்கீடு செய்த அரசாணையை நீதிமன்றம் ரத்து செய்தது.

அதே வேளையில், 50 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யவும் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதைதொடர்ந்து, சென்னை மாநகராட்சியில் உள்ள 200 வார்டுகளில் பெண்களுக்கான வார்டுகள் ஒதுக்கீடு செய்து, தமிழக அரசிதழில் அறிவிப்பு




வெளியிடப்பட்டுள்ளது. கடும் போட்டிஅதில், எஸ்.சி., பொதுப் பிரிவுக்கு மற்றும் எஸ்.சி., பெண்களுக்கு, தலா 16 வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளன.

மேலும், பொதுப்பிரிவு பெண்களுக்கு, 84 வார்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதன்படி, மொத்தம் 100 வார்டுகள், பெண்களுக்கு ஒதுக்கீடு செய்து, சென்னை மாநகராட்சி கமிஷனர் ககன்தீப் சிங் பேடி, அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

இது தவிர, சென்னை மாநகராட்சி மேயர் பதவியும், எஸ்.சி., பெண்கள் பிரிவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் எஸ்.சி., பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வார்டுகளில், பிரதான கட்சியை சேர்ந்த தி.மு.க., அ.தி.மு.க., சார்பில் போட்டியிட, அக்கட்சி நிர்வாகிகளிடம் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. அதேபோல், பிற வார்டுகளில் உள்ள, எஸ்.சி., அரசியல் பிரமுகர்கள் தங்கள் குடும்பத்து பெண்களை, அங்கு நிறுத்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மறைமுக தேர்தல் என்பதால், இந்த வார்டுகளில், அனைத்து கட்சியினரும் போட்டியிட வாய்ப்புள்ளது.எந்தெந்த வார்டுகள் யாருக்கு?எஸ்.சி., பொது பிரிவு: 3, 16, 17, 18, 21, 22, 24, 45, 62, 72, 73, 99, 108, 117, 144, 200எஸ்.சி., பெண்கள் பிரிவு: 28, 31, 46, 47, 52, 53, 59, 70, 74, 77, 85, 111, 120, 135, 159, 196

பொதுப்பிரிவு பெண்கள்: 2, 8, 9, 11, 13, 14, 15, 26, 33, 34, 39, 40, 41, 42, 43, 44, 48, 51, 58, 61, 65, 66, 67, 68, 69, 71, 75, 76, 79, 81, 83, 87, 88, 91, 93, 95, 96, 97, 98, 100, 101, 102, 103, 107, 109, 112, 113, 115, 118, 119, 122, 123, 124, 125, 126, 128, 131, 132, 134, 136, 147, 149, 150, 152, 153, 157, 158, 160, 161, 163, 164, 167, 171, 173, 174, 175, 179, 180, 183, 185, 187, 188, 191, 197இதர, 84 வார்டுகள் அனைத்து பொதுப்பிரிவினருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் எஸ்.சி., பெண் மேயர்! சென்னை மாநகராட்சி வரலாற்றில், 1933ம் ஆண்டு முதல் மேயர் பதவி இருந்து வருகிறது. தேர்வு செய்யப்படுபவர், ஓராண்டு மட்டுமே மேயர் பதவி வகிக்க முடிந்தது. அதன் பின், 1996ம் ஆண்டு முதல், ஐந்தாண்டுகளாக பதவிக்காலம் உயர்த்தப்பட்டது. இத்தனை ஆண்டுகளில், மாநகராட்சியில் 1971ம் ஆண்டு முதல் 1972ம் ஆண்டு வரை, காமாட்சி ஜெயராமன் என்ற பெண் மட்டுமே, ஓராண்டு மேயராக இருந்தார். தற்போது, நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடத்தப்பட்டால், முதல் முறையாக, பட்டியலினத்தை சேர்ந்த பெண் ஒருவர், சென்னை மாநகராட்சி மேயராக பதவி வகிக்க ஏற்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு என ஐம்பது சதவீத இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு நடக்கும் முதல் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் இது என்பதால் மாற்றத்தைக் கொண்டுவருமா என்ற எதிர்ப்பார்ப்பும் அதிகரித்துள்ளது!

● பதிப்பாளர்/ஆசிரியர்



## நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்...

# பதுங்கும் ஓ.பி.எஸ்.; பாயும் இ.பி.எஸ்.!



அலெக்ஸ் பாண்டியன்

'நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடக்குமா? நடக்காதா? என்ற சந்தேகம் கட்சியினருக்கு மட்டுமின்றி, தலைவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது' என்றபடியே அலுவலகத்திற்குள் என்ட்ரி ஆனார் அலெக்ஸ்.

‘‘பாஸ்... தேர்தல் வேலைகள்தான் படுஜோராராக நடந்து வருகிறதே. தமிழக தேர்தல் ஆணையரும் அனைத்துக் கட்சியினர் கூட்டத்தை நடத்தி முடித்திருக்கிறாரே?”

‘‘ஆமாம். அனைத்துக்கட்சி கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே, நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை தள்ளி வைக்கக்கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது”

“இந்த வழக்கை யார் தொடுத்தது..?”

“ஓய்வு பெற்ற டாக்டர் நக்கீரன் என்பவர் தொடர்ந்த வழக்கில், 3வது அலை உச்சத்தில் உள்ளதால், தற்போதைய சூழ்நிலையில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலை தள்ளி வைக்க வேண்டும். தேர்தலை நடத்தினால் கோவிட் பாதிப்பு மிக மோசமான நிலையை எட்டும் எனக்கூறியுள்ளார். இதனை விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி அமர்வு, வழக்கை 21-ந்தேதிக்கு விசாரிப்பதாக தெரிவித்துள்ளது”

“பாஸ்... ஐந்து மாநில தேர்தலே நடக்கும் போது, உள்ளாட்சித் தேர்தல் நடக்காமல் இருக்குமா..?”

“கண்டிப்பாக நடக்கும் என்று சிலரும்... கொரோனா தமிழகத்தில் அசுரவேகத்தில் பரவி வருவதால், தள்ளிப் போகவும் வாய்ப்பிருக்கிறது என்கிறார்கள். எல்லாம் ஓரிரு நாட்களில் தெரிந்துவிடும். அதற்குள் தேர்தல் ஆணையமும், தேர்தல் தேதியை அறிவித்துவிடும் என்கிறார்கள்”

“ஓ...ஹோ?”

‘‘தேர்தல் தேதி அறிவிப்பதிலேயே இப்படியெல்லாம் இடியாப்பச் சிக்கல் இருக்கையில், தி.மு.க. ஜரூராக நேர்காணலை நடத்தி, ‘விட்டமின்களை’யும் இறக்க தயாராக இருக்கிறதாம். அ.தி.மு.க. சார்பில்தான் கையப் பிசைந்துகொண்டிருக்கிறார்களாம்”

“ஏன்..?”

‘‘எப்போதுமே ஓ.பி.எஸ். தனது ஆதரவாளர்களுக்கு சீட் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருவார். கட்சியில் அதிகாரங்களையும் சரிசமமாக பிரித்துக்கொண்டார். ஆனால், போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ‘விட்டமின்களை’ கொடுப்பதில் மட்டும் பின்வாங்குகிறாராம். தனது மாவட்டத்திற்குக் கூட செலவு செய் தயங்குகிறாராம்”

“ஓ.பி.எஸ். பதுங்குகிறாரோ..?”

‘‘புரிந்துகொண்டால் சரி... இந்த விவகாரத்தில்தான் எடப்பாடி பழனிசாமி எகிற ஆரம்பித்திருக்கிறார். ‘சகலமும் நாங்கள் செய்ய வேண்டும். அதிகாரத்திற்கு மட்டும் பங்கு போட்டுக்கொள்ள வருகிறார். கட்சிக்கு எதிராக செயல்களில் ஈடுபடுபவர்களிடம் எனக்கு எதிரான நட்பு பாராட்டி வருகிறார்’ என பாய்ந்திருக்கிறார். இந்த விவகாரம் ஓ.பி.எஸ். தரப்புக்கு பாஸ் செய்ய சற்று அடக்கியே வாசிக்கிறாராம்”



“பாஸ்... மூட்டையை அவிழ்ப்பது யார்..?”

“ஓ.பி.எஸ். - இ.பி.எஸ். இரண்டு தரப்பிலுமே ‘மூட்டை’யை அவிழ்க்க தயங்கி வருகிறார்களாம். ஆனால், அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் வெற்றி பெறுவது நிச்சயம் என்று உற்சாகப்படுத்தி வருகிறாராம் இ.பி.எஸ்.”

“என்ன காரணம்..?”

‘‘தேர்தலின் போது குடும்ப அட்டை தாரர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என தி.மு.க. வாக்குறுதி அளித்தது. கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் ஏதேனும் அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்த்தார்கள் - அது நடக்கவில்லை. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு வழங்குவதற்கே நிதி ஆதாரம் போதுமானதாக இல்லை என்று தி.மு.க. தலைமைக்கு நிதித்துறையில் இருந்து தகவல் சொல்லப்பட்டிருக்கிறது”

‘‘பாஸ்... ஏற்கனவே நகைக் கடன் தள்ளுபடியில், தகுதியின் அடிப்படையில் சிலருக்கு மட்டுமே தள்ளுபடி செய்ததே தி.மு.க.விற்கு கொஞ்சம் எதிர்ப்பலையை உருவாக்கிவிட்டதே..?”

‘‘ஆமாம். அதனால்தான் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் விஷயத்தில், தெளிவான அறிவிப்பை வெளியிட வேண்டும் என்று முதல்வர் காத்திருக்கிறாராம். இதையெல்லாம் தங்களுக்கு சாதமாக அமையும் என்று எடப்பாடி கருதுகிறாராம். அதனால்தான், ‘வேட்பாளர்களும்’ கொஞ்சம் செலவு செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்”

“வேட்பாளர்கள் தயாரா..?”

“கடந்த ஐந்து ஆண்டுகளாக வளமான துறையை கையில் வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் முதலீடு செய்தவர்கள், ‘மூட்டை’யை அவிழ்க்கட்டும். கட்சிக்காக நாங்கள் செலவு செய்ய மட்டும்தான் பிறந்திருக்கிறோமா?’ என்று எடப்பாடியிடும் எதிர்கேள்வி கேட்டிருக்கிறார்களாம். கட்சி சார்பில் ‘ஏதாவது’ வழங்கப்படும் என்கிறார்கள். அதோது, தமிழகம் முழுவதும் தேர்தல் பிரச்சாரம் செய்யவும் எடப்பாடி பழனிசாமி ஆயத்தமாகி வருகிறாராம்”

“பாஸ்... அமைச்சரவை மாற்றம் வரும் என்று எதிர்பார்த்தால், இலாக்காக்கள் மட்டும் மாற்றப்பட்டிருக்கிறதே..?”

“நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் வெற்றிக்கு பிறகு அமைச்சரவையில் மிகப்பெரிய மாற்றம் இருக்கும் என்கிறார்கள். முக்கியத்துறை உதயநிதி ஸ்டாலின் வசம் செல்லும் என்கிறார்கள். அதுவரை எந்தவொரு மாற்றமும் இருக்காது என்கிறார்கள்”

“ஓ...ஹோ..?”

“தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஒரு நிலைப்பாட்டையும், ஆட்சிக்கு வந்த பிறகு ஒரு நிலைப்பாட்டையும் எடுக்கிறது என்று எடப்பாடி பழனிச்சாமி பகீர் குற்றச்சாட்டை கிளப்பியிருக்கிறார்”

“பாஸ்... விளக்கமாகச் சொல்லும்..!”

‘‘எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘தமிழகத்தில் திமுக அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் கொரோனா நோய்த்தொற்றின் பரவல் அதிகரித்து வருகிறது. இதை அதிமுக சார்பில் சுட்டிக் காட்டிய போதெல்லாம், கொரோனா அதிகரிக்கவில்லை என்று மழுப்பலான அறிக்கைகளைத் தமிழக அரசு வெளியிட்டது. ஆனால், இந்த சந்தர்ப்பவாத அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ராக்கெட் வேகத்தில் கொரோனா பரவுவதாக ஊடக பேட்டியில் தற்போது ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். மேலும் பொங்கல்




‘தமிழக அரசியல்’ இதழை தொடர்ந்து படித்துக்கொண்டிருக்கும் வாசகர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. ‘புகார் பெட்டி’ என்ற புதிய பகுதி தொடங்கி இருக்கிறோம். வாசகர்கள் தாங்கள் வசிக்கும் பகுதிகளில் நடக்கும் அட்டூழியங்கள், ஊழல்கள், பொதுமக்கள் பாதிப்படையக்கூடிய வகையில் எந்தவொரு நிகழ்வு நடந்தாலும், அதனை ‘அலுவலக இ-மெயில் முகவரிக்கு அனுப்பலாம் அல்லது கடிதம் மூலமாகவும் அனுப்பலாம்.

உங்களது தகவல்களை சம்பந்தப்பட்ட பகுதி நிருபர்களுக்கு அனுப்பி, புலனாய்வு செய்து, செய்தியில் உண்மையிருந்தால் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்!

விடுமுறைக்குப் பிறகு நோய்த் தொற்று அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்”

“ம்ம்ம்..!”

‘‘தற்போதைய சூழ்நிலையில் நாளொன்றுக்கு சுமார் 24,000 பேர் தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு வருவதாக அதே அரசு செய்திக் குறிப்பினையும் வெளியிடுகிறது. ஆனால் உண்மையில் 50 ஆயிரம் பேருக்கு மேல் பாதிக்கப்படுவதாக சமூக வலைதளங்களில் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். அதிமுக அரசு எடுத்த இடையராத நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக, தேர்தல் அறிவித்த 2021 பிப்ரவரி மாதத்தில் தமிழகத்தில் நாள் ஒன்றுக்கு கொரோனா நோய்த் தொற்றால் சுமார் 500 பேர்தான் பாதிக்கப்பட்டிருந்தனர். 2020ம் ஆண்டு மே மாதம் முதல் வாரத்தில், தமிழகத்தில் நாள் ஒன்றுக்கு கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 775. அந்தக் காலகட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இன்றைய முதல்வராக இருக்கும் ஸ்டாலின், ‘டாஸ்மாக் மதுபான கடைகள் திறந்து இருப்பதால்தான் நோய்த் தொற்று பரவுகிறது’ என்று ஒரு பிரசாரத்தை முன்வைத்தார்”



மு.க.ஸ்டாலின்



உதயநிதி ஸ்டாலின்

“ஆமாம். அப்போது தி.மு.க.வினர் தங்களது வீட்டின் முன்பு கறுப்புக் கொடி ஏற்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்களே?”

‘‘ஆனால், இன்றைக்கு இந்த திமுக அரசின் வாக்குமூலப்படி, தினமும் சுமார் 24 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் வேளையில், டாஸ்மாக் கடைகளைத் திறந்து வைத்திருப்பது என்ன நியாயம்? தமிழகம் முழுவதும் ஒவ்வொரு டாஸ்மாக் கடை மற்றும் அதனுடைய பார்களின் முன்பும் நூற்றுக்கணக்கானோர் எந்தவிதமான கொரோனா பாதுகாப்பு விதிமுறைகளையும் கடைப்பிடிக்காமல் கூடி நிற்பதைக் கண்கூடாகப் பார்க்கமுடிகிறது.

தமிழக மக்களின் உயிரைக் காக்க வேண்டிய பொறுப்பில் உள்ள திமுக அரசு தங்களுடைய கஜானாவை நிரப்புவதில் குறிக்கோளாக இருந்து, டாஸ்மாக் மதுபான கடைகளைத் திறந்து வைப்பது கடும் கண்டனத்துக்குரியதாகும். ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஒரு நிலைப்பாடு ஆட்சிக்கு வந்த பின்பு மற்றொரு நிலைப்பாடு என்று திமுக அரசு செயல்படுகிறது. ஆகவே இந்த திமுக அரசு மக்களின் உயிரோடு விளையாடாமல் தன்னுடைய இரட்டை வேட நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, நோய் கட்டுக்குள் வரும் வரை தமிழகம் முழுவதும் உள்ள டாஸ்மாக் மதுபான கடைகள் மற்றும் பார்கள் உடனடியாக மூட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்’ என்று அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்”

“டாஸ்மாக் பார்கள் மற்றும் கடைகள் மூடப்படுமா..?”

“சமீபத்தில்தான் டாஸ்மாக் பார்களுக்கு டெண்டர்கள் நடந்தது. பல லட்சங்களைப் போட்டு பார் எடுத்துவர்கள், கொடுத்த காசை எப்படி எடுப்பார்கள்... சமயம் பார்த்துதான் எடப்பாடி பழனிசாமியும் கொளுத்திப் போட்டிருக்கிறார்” என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார் அலெக்ஸ். ■

● ஜி.ஆர்.கண்ணன்

# ‘எந்தவொரு சூழலிலும் விட்டுக்கொடுக்க மாட்டோம்!’

“பண மோசடி வழக்கு பதிவு செய்தபோதும், தலைமறைவாக இருந்து காவல்துறையால் கைது செய்து சிறை சென்ற போதும் தனக்கு ஆதரவாக அதிமுகவில் இருந்து யாரும் பேசவில்லையென முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி ஆதங்கத்தில் இருந்து வந்தார். ராஜேந்திர பாலாஜியே ஆச்சர்யப்படும் வகையில் முன்னாள் அமைச்சர்கள் எஸ்பி வேலுமணி, தங்கமணி உள்ளிட்ட முன்னாள் அமைச்சர்களை நேரில் அனுப்பி, ‘நாங்க இருக்கோம் எதையும் சந்திப்போம்’ என ஈபிஎஸ் தரப்பில் பேசப்பட்ட விவகாரம் அதிமுகவில் பரப்பரப்பாக பேசப்பட்டு வருகிறது.

ஆவின் மற்றும் அரசு துறைகளில் வேலை வாங்கி தருவதாக கூறி ரூ. 3 கோடி அளவில் பண மோசடி செய்துள்ளதாக விருதுநகர் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி மீது வழக்கு பதிவு செய்தனர். உடனே ராஜேந்திர பாலாஜி தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன் ஜாமீன் மனுவை தாக்கல் செய்த போதிலும், அந்த மனுவும் கடந்த 17ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது.



பண மோசடி வழக்கை கேஷுவலாக டீல் பண்ண நினைத்த ராஜேந்திர பாலாஜிக்கு முன் ஜாமீன் மனு தள்ளுபடி செய்யப்பட்டதும், ஆளும் அதிகாரத்தில் இருந்த போது திமுகவையும், திமுக தலைவர் ஸ்டாலினை பேசிய பேச்சும் ராஜேந்திர பாலாஜி கண் முன்னே வந்து போனதும் ஆளும் திமுக தரப்பு எப்படியும் தன்னை கைது செய்து அசிங்கப்படுத்தி விடுமென எண்ணி உச்சநீதிமன்றத்தில் முன் ஜாமீன் மனுவை தாக்கல் செய்து விட்டு தலைமறைவானார். கார் விட்டு கார் மாறி ஊர் விட்டு ஊர் இடம் பெயர்ந்து 19 நாட்களாக எட்டு தனிப்படைக்கும் டிமிக்கி கொடுத்த ராஜேந்திர பாலாஜியை கர்நாடக மாநிலத்தில் கைது செய்து பல கட்ட அலைக்கழிப்புகளுக்கு திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர்.

உச்சநீதிமன்றத்தில் ராஜேந்திர பாலாஜி தரப்பில் தாக்கல் செய்த ஜாமீன் மனு மீதான விசாரணையில் நான்கு வார இடைக்கால ஜாமீன் உத்தரவை பிறப்பித்ததும் திருச்சி மத்திய சிறையில் வெளிவந்த போதிலும் அதிமுக நிர்வாகிகள் யாரையும் சந்திக்காமல் தன்னுடைய மாவட்ட ஆதரவாளர்களுடன், உச்சநீதிமன்ற உத்தரவுப்படி திருத்தங்கலில் இருக்கும் தனது வீட்டிலேயே தங்கி இருக்கிறார்.

சிறையில் இருந்து வெளிவந்த அன்று மட்டும் கட்சி நிர்வாகிகள் யாரையும் சந்திப்பதை தவிர்த்த ராஜேந்திர பாலாஜி, மறுநாள் முதல் அனைத்து கட்சியினரையும் சந்திக்க தொடங்கியதோடு, கட்சி சார்பில் தனக்கு யாரும் ஆதரவளிக்கவில்லை, அதிமுக ஒருங்கிணைப்பாளர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டாலும் ரெஸ்பான்ஸ் இல்லை, மற்ற அமைச்சர்கள் வீட்டில் ரெய்டு நடந்தப்ப ஆளும் திமுகவை கண்டிக்கும் விதமாக வேகமாக அறிக்கை மற்றும் பேட்டி அளித்த அதிமுக தலைமை தன்னை மட்டும் நிற்கதியாக விட்டுட்டாங்களே என தனக்கு நெருக்கமானவர்களிடம் புலம்பி இருக்கிறார்.



எடப்பாடி பழனிசாமி

மேலும் ஆளுங்கட்சியாக இருந்த போது திமுகவை எதிர்த்து பேசியது உட்பட தமிழகம் முழுவதும் அமைச்சர் என்பதை தாண்டி கட்சி பேச்சாளர் போல பிரச்சாரம் செய்தேன். அப்போது தேவைப்பட்ட ராஜேந்திர பாலாஜி தற்போது அதிமுகவுக்கு தேவைபடலை போல. அதுக்கேத்த மாதிரி தான் தலைமறைவாக இருக்கும் போது அதிமுக தரப்பில் தனக்கு யாரும் சட்டரீதியாகவோ, மறைமுகவோ உதவி செய்யலை, பாஜக கட்சியினர் தான் உதவி பண்ணாங்க. அப்புறம் எதுக்கு அதிமுகவில் இருக்கணும், பாஜக ஆதரவாளர் முத்திரை ஏற்கனவே என்மீது இருக்குது , அங்கிட்டு போய் சேர்ந்துடலாம்னு இருக்கேன் என அதிமுக தலைமைக்கு தெரியப்படுத்தும் வகையில் தன்னுடைய ஆதரவாளர்கள் கூட்டத்தையும் தன்னுடைய வீட்டிலேயே நடத்திய தகவல் அதிமுக தலைமைக்கும் சென்றடைந்தது.

சிறை சென்று திரும்பிய விரக்தியில் இருக்கும் ராஜேந்திர பாலாஜியை சமாதானப் படுத்த நினைத்த ஈபிஎஸ் தரப்பு முன்னாள் அமைச்சர் மாஃபா பாண்டியராஜனை அவரது வீட்டிற்கு அனுப்பி பேச்சுவார்த்தை நடத்தினர்.

வீட்டில் நடைப்பெற்ற எம்ஜிஆர் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்ள செய்துள்ளனர். முன்னாள் அமைச்சர் மாஃபா பாண்டியராஜன் ராஜேந்திர பாலாஜி தரப்பில் பேசப்பட்ட விவகாரத்தை ஈபிஎஸ் தரப்பில் தெரிவித்திருக்கிறார். அவர் கிளம்பிய சில மணி நேரங்களில் முன்னாள் அமைச்சர்கள் எஸ்பி வேலுமணி, தங்கமணி, சி.வி. சண்முகம், ஆர்பி உதயக்குமார் ஆகியோரையும் அனுப்பி ராஜேந்திர பாலாஜி ஆச்சர்யப்படும் வகையில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

மேலும் ராஜேந்திர பாலாஜியிடம் தொலைப்பேசியில் பேசிய ஈபிஎஸ், "எந்த ஒரு சூழ்நிலையிலும் விட்டு கொடுக்கமாட்டோம். நாங்க இருக்கோம் கட்சி எப்போதும் ஆதரவாக இருக்கும் தேவையில்லாத குழப்பம் வேண்டாம்' என பேசியதாக தகவல் தெரிவிக்கின்றனர். மேலும் கட்சியில் இருந்து கொண்டே வழக்கு பதிவு செய்ய காரணமாக இருந்தவரை கட்சியில் இருந்து நீக்கம் பண்ணியாச்சு. மேலும் தேவைப்படும் பட்சத்தில் வழக்கு தொடுக்க பின்புலமாக இருந்து செயல்பட்ட விருதுநகர் கிழக்கு மாவட்ட அதிமுக செயலாளர் ரவிச்சந்திரனை மாற்றவும் தயார் எனவும் உத்தரவாதம் தந்துள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜியுடன் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பேச்சுவார்த்தை நடத்தி முடித்த எஸ்பி வேலுமணி கிளம்பும் போது பழைய 'பன்னீர்செல்வமாக' திரும்ப வரணும்னு ராஜேந்திர பாலாஜியிடம் சொன்னதும் அட போங்கண்ணே ஏற்கனவே பேசிய பேச்சுக்கே இன்னும் விடை தெரியலை, மறுபடியும் முதல்ல இருந்தா என பதில் கவுண்டர் கொடுத்துள்ளார்.

தனக்கு ஆதரவாக யாரும் இல்லை என புலம்பி வந்த ராஜேந்திர பாலாஜியை முன்னாள் அமைச்சர்கள் சந்தித்து ஆதரவாக பேசி சென்றது அண்ணாச்சிக்கு ஹேப்பி என்கின்றனர் லோக்கல் அதிமுகவினர். ■

## – ராஜேந்திர பாலாஜிக்கு எடப்பாடி கொடுத்த உறுதி

● கிஷோர்





# மக்கள் வசிப்பிடத்தில் கழிவுநீர் கால்வாய்!

**"காரைக்குடி நகராட்சியில் விஐபிக்கள் வசிக்கும் ஏரியா பர்மா காலனியாகும். இந்த பர்மா காலனியில் உள்ள கற்பக விநாயகர் நகர், பாரிநகர், அழகப்பாபுரம் பகுதிகளில் முறையான வடிகால் வசதியை ஏற்படுத்தாமல், 1000 வீடுகளின் கழிவு நீரையும் பள்ளம் தோண்டி எந்த விதமான முறையான வடிகால் வசதியும் செய்யாமல் திறந்து விட்டு ஏரியாவையே நாற்றமடிக்க செய்து விட்டார்கள்.**

இது அனைத்துமே காரைக்குடி காங்கிரஸ் எம்.எல்.ஏ. மாங்குடியின் தூண்டுதலின் பேரில் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் ஹேமலதாவின் ஆணைப்படி நடக்கும் அட்டூழியமாகும்.

நீங்களாவது இதனை வெளிக் கொண்டு வந்து எங்களுக்கு நியாயம் கிடைத்திட வழிவகை செய்ய வேண்டும் என நமது தமிழக அரசியல் இதழுக்கு தொடர்ந்து கடிதங்கள் வர.... நாமும் கள விசாரணையில் இறங்கினோம்.

காரைக்குடி கற்பக விநாயகர் மகளிர் சுய உதவிக்குழு அமைப்பை சேர்ந்த பெண் நிர்வாகிகள் நம்மிடம் கூறும்போது, "எங்களது கற்பக விநாயகர் நகர் காரைக்குடிச லீக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சங்காரபுரம் பஞ்சாயத்தில் அமைந்துள்ளது. விஐபிக்கள் அதிகம் வசிக்கும் எங்கள் ஏரியாவில் சமீபத்தில் மழைநீர் செல்லுவதற்காக ஏதுவாக வடிகால் ஒன்றை பள்ளம் தோண்டி ஏற்படுத்தி ஏற்படுத்தினார்கள். இதனை மழைக்காலம் முடிந்ததும் மூடாமல் உள்ளார்கள்.

இதனால் இந்த வடிகால் பகுதி என்பது அழகப்பா பல்கலைக்கழக சயின்ஸ் பிளாக்கில் ஆரம்பித்து அழகப்பா பொறியியல் கல்லூரிக்கு சொந்தமான காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுள்ள இடம் வரைக்கும் தங்கு தடையின்றி சாக்கடை நீரை சுமந்து கொண்டு செல்கிறது.

நாள் தோறும் இப்படி நிரம்பி ஓடும் சாக்கடை நீரால் பாரி நகர், கற்பக விநாயகர் நகர், அழகப்பாபுரம் பகுதியில் வசிக்கும் 1000 க்கும் அதிகமான குடும்பங்கள் மூக்கை பொத்திக் கொண்டு சுவாசிக்கவே முடியாத அளவுக்கு சிரமப்படுகிறோம். ஆரம்ப நிலையிலேயே இதற்கு எதிர்ப்பு தெரிவித்த 3 ஏரியா குடியிருப்பு வாசிகளும், இது சம்மந்தமாக சாக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளையும், மாவட்ட கலெக்டரையும் சந்தித்து முறையிட்டோம்.



ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளோ, இந்த திட்டம் தற்போதைய காரைக்குடி எம்.எல்.ஏ மாங்குடியின் களை திட்டமாகும். அவர் சங்கராபுரம் பஞ்சாயத்து தலைவராக பதவி வகித்த போதே போடப்பட்டதாகும்.



மாங்குடி

36 லட்ச ரூபாய்க்கு மதிப்பீடு தயார் செய்து, பர்மா காலனி, கற்பக விநாயகர் நகர், பாரி நகர் ஆகிய குடியிருப்பு வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரை, கழிவு நீர்கால்வாயாக மாற்றி, அழகப்பா அரசு பொறியியல் கல்லூரிக்கு சொந்தமான பட்டா இடத்தில் கழிவு நீர்கால்வாய் அமைத்திட வேண்டும் என்பது எம்.எல்.ஏவின் நீண்ட நாள் கனவாகும். அவரது கனவை நிறைவேற்றும் விதமாகவே அரசு அதிகாரிகள் மெனக்கெட்டு வருகிறோம் என அசால்ட்டாக கூறுகிறார்கள்.

குடியிருப்பு வாசிகள் உள்ள இடத்தில் முறையான வடிகால் வசதியை ஏற்படுத்தாமல் கழிவு நீர்கால்வாய் அமைத்தால் இங்கு வசிக்கும் 1000 குடியிருப்பு வாசிகளும் நிலத்தடி நீர் மாசு அடைந்து கொசு உற்பத்தி, இதனால் ஏற்படும் சுகாதார கேட்டால் டெங்கு உள்ளிட்ட ஆட்கொல்லி நோய் அபாயம் குறித்தெல்லாம் கவலைப்படாத அரசு அதிகாரிகள் எம்.எல். ஏவின் ஏவல் படையாக மாறி செயல்படுவது தான் வேதனையளிப்பதாக உள்ளது" என்றார்கள்.

எம்.எல்.ஏவின் இந்த கழிவு நீர்கால்வாய் அதிரடி குறித்து நம்மிடம் பேசிய சமூக ஆர்வலர்கள் சில பேர் கூறும்போது, "இந்த கழிவு நீர்கால்வாய்யால் ஒரு சில அப்பார்ட்மெண்ட் ஓனர்களுக்குத்தான் லாபமாகும்.

ஏனென்றால் முறையான வடிகால் வசதி இல்லாமல் கட்டடப்பட்டுள்ள இந்த அப்பார்ட்மெண்ட் ப்ளாட்டுகள் இதனால் ரொம்பவே பலன் பெறும் என்றவர்கள், எம்.எல்.ஏவின் இந்த ஐடியா தவறானது என சுட்டிக்காட்டிய ஓ.சிறுவயல் கிராம நிர்வாக அலுவலர் அருள் என்பவர் மீதும், முன்னாள் சங்கராபுரம் பஞ்சாயத்து தலைவரான பாண்டி மீதும் பிசிஆர் வழக்குகள் போடப்பட்டது. இதனால் இது குறித்து வாய் திறக்கவே இப்பகுதி குடியிருப்பு வாசிகள் அச்சப்படுவதாக கூறியவர்கள், நீங்கள் இது சம்மந்தமாக காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி தரப்பையும் விசாரித்து எழுதுங்கள்" என்றார்கள்.

**– இது காரைக்குடி எம்.எல்.ஏ.வின் கலாட்டா!**

உங்களது பட்டா இடத்தில் கழிவு நீரை உருண்டோடுவதற்கும், கழிவு நீர்கால்வாய் அமைக்கவும் அனுமதி கொடுத்தீர்களா என நாம் விசாரித்த போது, "எங்களது பட்டா இடத்தில் கழிவு நீரை திறந்து விடுவது தவறானது என்பது குறித்து நாங்கள் போலீஸிடம் புகார் தெரிவித்துள்ளோம், போலீஸாரும் இது சம்மந்தமாக எப்.ஐ.ஆர் போட்டு விசாரித்து வருகிறார்கள்'' என்றவர்கள், ''மாவட்ட கலெக்டர் மதுசூதன் ரெட்டியும் சம்மந்தப்பட்டவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

எங்களது அனுமதி இல்லாமல், எங்களது பட்டா இடத்தில் கழிவு நீர்கால்வாய் அமைப்பதற்கு ஒரு பிடி மண்ணைக் கூட விட்டுத்தர மாட்டோம் என்றவர்கள், போலீஸார் நியாயமாக விசாரித்து சம்மந்தப்பட்டவர்களை நிச்சயமாக கைது செய்வார்கள் என்று நம்புகிறோம்" என்றார்கள்.

கடைசியாக நாம் காரைக்குடி எம்.எல்.ஏ மாங்குடியிடமே அனைத்துக்கும் விளக்கம் கேட்டோம். அவரோ, ''காரைக்குடியில் இந்த ஆண்டு அளவுக்கு அதிகமாக மழை பெய்ததால், மழை நீரை குடியிருப்பு பகுதியில் தேங்கவிடாமல் செய்வதற்காகவே, மழை தண்ணீரை வெளியேற்றவே கால்வாய் தோண்டினோம்.

இதனால் கழிவு நீரை வெளியே அனுப்ப முயற்சிப்பதாக "கரடி" விடுகிறார்கள் என்றவர், பர்மா காலனி பகுதி இயற்கை அமைப்பும், வாட்டமும் பூகோளரீதியாகவே கழிவு நீரை வெளியேற்ற வழியில்லாமல் உள்ளது. இதனால்தான் இதற்கு ஒரு நிரந்தர தீர்வுக்காக பல திட்டங்களை போட்டு வருகிறோம். பொது மக்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பு வராத வகையில், நிச்சயமாக இதற்கு ஒரு தீர்வு கண்டு, மக்களின் அனைத்து சந்தேகங்களுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம்'' என்றார் உறுதியோடு.

காரைக்குடி எம்.எல்.ஏவின் கழிவு நீர்கால்வாய் கனவு மக்களை வதைபடுத்தாமல் அமைந்தால் அனைவருக்குமே சந்தோஷம் தான். ■


வார இதழ்
தமிழக அரசியல்
புதியதோர் உலகம் செய்வோம்

## சந்தா படிவம்

**ஆண்டு சந்தா ரூ. 940/-**

சந்தா தொகையினை டி.டி. மூலம் செலுத்துவோர் **JSK PUBLICATIONS** என்ற பெயரில், சென்னையில் மாற்றத்தக்க **(Payable at Chennai)** வகையிலும், காசோலை மூலம் செலுத்துவோர் **JSK PUBLICATIONS** என்ற பெயரிலும் வழங்க வேண்டும். கீழ்கண்ட படிவத்தைத் தெளிவாக நிரப்பி அனுப்ப வேண்டும். உங்களின் முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடுவது மிகமிக அவசியம். டி.டி. அல்லது காசோலை அனுப்ப வேண்டிய முகவரி:

**# 47, கிரியப்பா சாலை, தி.நகர், சென்னை – 600 017. தமிழ்நாடு. ☎ 044 – 43511883**

ஆன்லைன் மூலம் சந்தா செலுத்துவோர் கீழ்கண்ட வங்கி கணக்கில் செலுத்தவும்.

| | | |
|---|---|---|
| Name | : | JSK PUBLICATIONS |
| Account No | : | 6869274765 |
| Bank Name | : | INDIAN BANK |
| IFSC No | : | IDIB000T020 |
| Branch | : | Thousand Lights |

சந்தா தொடர்பான சந்தேகங்களுக்கு **044 - 43511883** என்ற எண்களை தொடர்புகொள்ளவும்.

### சந்தாதாரர் படிவம்

பெயர்:............................................................

முகவரி:............................................................

............................................................

............................................................

............................................................

............................பின்கோடு:............................

தொடர்பு எண்:............................................................

### சந்தா தொகை செலுத்திய விவரம்

டி.டி. / காசோலை எண்:............................தேதி:....................

தொகை:......................வங்கியின் பெயர்:............................

............................................................

கிளை:............................................................

* நிபந்தனைகளுக்குட்பட்டது.

# சொகுசு வாழ்க்கையை வழங்கும் மதங்கள்!

நெருப்பு சிந்தனையாளன் இன்பா எழுதும்...



## ஹைடெக் சிலுவையில் அவன்...

மனம் தேடும் தொடர்

**அகத்தியர் மாறு வேடத்தில் திரிந்த காலகட்டத்தில், தான் வளர்த்து வந்த நாயை தவ வலிமையால் இந்திரன் ஆக்கினார். இந்த இந்திரன் புராணத்தின் கூற்றுப்படி மூன்றாம் இந்திரன் என்று சொல்லப்படுகிறான்.**

*மூன்றாம் இந்திரன் மறு பிறப்பில் அர்ச்சுனனாகவும், அதற்கு அடுத்த பிறப்பில் நக்கீரனாகவும், பின் கண்ணப்பனாகவும் மற்றும் பொய்யாமொழிப் புலவராகவும் பிறப்பெடுத்தார் என்கிறது மறை நூல்கள். இறைவன் என்ற பெருமையில் வீற்றிருந்தவர்கள் ஒவ்வொரு காலத்திலும் செயற்கையாக உருவாக்கப்பட்டவர்கள் என்கின்ற தத்துவ நெறியை இதன்மூலம் நம்மால் உணர முடிகிறது.*

*மனம் தொடர்பில் பாதிப்புகளை மனித இனம் சந்திக்கும் வேளையில், காக்கும் தலைவர்களாக இறைகள் இருந்தார்கள் என்பதை நம்பிக்கையின் அடிப்படையில் மனித இனம் ஏற்றுக் கொண்டிருந்தது. இந்திரன் படைப்பும் அதனைத் தொடர்ந்து அவர் எடுத்த பிறவிகளும் இதை உறுதிப்படுத்துகிறது.*

*மனித இனத்தைக் காயப்படுத்தும் எச்செயல்களும் மதம் ஆகாது என்பதை இதன் மூலம் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. ஆனால், இன்று மதத்தின் தத்துவ நெறிமுறைகள் இக்கோட்பாட்டில் பயணிக்கின்றனவா? என்பதை ஆராய்ந்தால் கேள்விகுறிதான் பதிலாகக் கிடைக்கிறது.*

*சங்கப் புலவர் கோடித்தலை விழுதாண்டினார் எழுதிய புறப்பாடலில் ஓர் செய்தி சொல்லப்படுகிறது. அச்செய்தியை நாம் உள்வாங்கிக் கொண்டால், இறைகளின் குணநலன்கள் மானுடத்தில் காணாது என்பது புரியும். தொண்டரடிப் பொடி ஆழ்வார் என்பவரின் மாணவன் கணிகன் என்பவனை பல்லவ மன்னன் நாடு கடத்திய போது, தன் மாணவனுக்கு இடர் எனில் குரு கூடவே நிற்பதுவே தர்மம் என, ஆழ்வார் சீடனோடு நாட்டை விட்டு வெளியேறினார். தன் மீது குரு காட்டிய பாசம் கணிகனை பெரும் மகிழ்வு கொள்ளச் செய்திட, அவர் கண்களில் அவரையும் மீறி கண்ணீர் பெருக்கெடுத்தது.*

**18**

*காஞ்சி மாநகரை விட்டு இருவரும் கிளம்பும் போது, அம்மண்ணின் பாதுகாவலராக இருந்த இறைவன் திருமாலையும், தன்னுடன் வருமாறு*

ஆழ்வார் அழைக்க, எவ்வித மறுப்பும் சொல்லாமல் பக்தனின் குரலுக்கு செவி சாய்த்து, திருமாலும் அவர்களுடன் நாட்டை விட்டு வெளியேறி தன் அன்பை வெளிப்படுத்தினார்.

இக்கட்டில் இருப்போர் குரலுக்கு உதவிடும் மனப்பாங்கு கொண்டவர்களை மதங்கள் இறைகளாகக் காட்டின. பிறருக்கு உதவும் நிலைத்த அன்பைவிட, இப்புவியை தன்வயப்படுத்த வேறு எதுவும் தேவையில்லை என்பதை இறைகள் அறிந்திருந்தன. ஆனால், இறைப் பெயரை இன்று உச்சரிப்போர் நேர்த்தியற்ற நெறிமுறைகளை வகுத்துக் கொண்டு, இறைகளைக் கொடூரக் கரங்களைக் கொண்டு மானபங்கம் செய்து மகிழ்கிறார்கள்.

மானுடப் பிறப்பும் இம்மண்ணில் கிடைக்கக் கூடிய வாழ்க்கையும் கிடைத்தற்கரியது. வரம் என கிட்டிய அந்த வாழ்வு ஒவ்வொருவரும் உணர்ந்து வாழ வேண்டியவை. உயிர் விரும்பி கூடவே பயணிக்கும் ஆற்றலென அனைவரும் அறிவர். ஆயினும், திரும்பி வரா உயிரை பிறர் உடலிலிருந்து பறித்தெடுத்து, மதவெறியை வெற்றியெனக் காட்டிக் கொள்கிறார்கள். எத்தனை பிஞ்சுக் குழந்தைகள் மத நோயாளிகளால் குதறப்பட்டு, குருதிச் சான்றுகளாக மறைந்து போயிருக்கின்றார்கள்! பக்தர் என்ற போர்வையில் பகல் வேடதாரிகள், மிதிவண்டிகள் நிறுத்துமிடத்து வண்டிகள் போல வரிசையாக நின்று, தங்கள் பாவங்களையும் அதற்கொப்ப அடுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனை மதம் என்று இவ்வகிலம் அங்கீகரிப்பது ஏற்றுக் கொள்ள முடியாத துயரம்.

மனிதர்கள் ஊருணி போல வாழ வேண்டும் என திருக்குறள் சொல்வதைக் கேட்டிருப்போம். இல்லையெனில், படித்தாவதிருப்போம். அது ஏன் ஊருணி போல வாழ வேண்டுமெனச் சொல்லப்படுகிறது? நீரால் நிரம்பிக் கிடக்கும் ஊருணி, பிறர் தாகம் தீர்க்க வேண்டுமென, தன்னை அர்ப்பணிக்கும் மனிதர்களும் பிறர் நலம் போற்றி வாழ வேண்டும் என்பதுதான் அதில் சொல்லப்பட்ட தத்துவம்.

முனிவர் ஒருவர் நடுக்காட்டில் ஓங்கி வளர்ந்த ஆலமரம் ஒன்றின் அடியில் தவமிருந்து கொண்டிருந்தார். அவ்வழியே வந்த வேடன் முனிவரைக் கேலி செய்யும் விதமாக, கையில் அம்புகள் தைத்த நிலையில் அவனால் பிடிக்கப்பட்ட புறாக்களின் உடலிலிருந்து வடிந்து கொண்டிருந்த குருதியை முனிவரின் முகத்தில் தேய்த்துவிட்டான்.

முனிவரின் முகத்தில் அவன் தேய்க்கும் போதெல்லாம் முனிவர் கண் திறந்து அவனைப் பார்த்து மெல்லியதாக புன்னகை செய்து கொண்டார். வேடனுக்கு அதிர்ச்சி. இவ்வளவு கேலியாக நடத்தியும் முனிவர் கோபம் கொள்ளாமல் புன்னகைக்கிறாரே... சூடு சுரணையற்ற மனிதன் என எண்ணவும் முடியவில்லை, இம்முனிவர் தற்சார்பு குணமே இதுதானா? என்று கருதவும் முடியவில்லை என குழப்பத்தோடு நின்றான்.

முனிவர் கண்ணைத் திறந்து பார்வையைத் திருப்பாமல் வேடனைப் பார்த்தார். அவன் தலை குனியத் தொடங்கியது. தம்பி, காய்த்துக் குலுங்கும் மரத்தில் நீ கல்லால் அடித்தால் அவைகள் திருப்பி உன்னைத் தாக்குவதில்லை. கனிகளையே பரிசாக உனக்குத் தரும். அதற்கு தீமை செய்யத் தெரியாது, என முனிவர் சொல்ல வேடன் தவறை உணரத் தொடங்கினான்.

மதங்கள் மரத்தின் குணத்திற்கு ஒத்தவை. கல்லெறியும் போதும் கனிகளைக் கொடுக்க வேண்டும், கல்லெறிகிறார்களே எனக் கோடாரியாக மதங்கள் மாறியதால் இன்று அகிலத்தில் எப்பக்கமும் அடையாளங்களை மதங்கள் இழந்திருக்காது. அன்பு, பக்குவமாக ஏற்றுக் கொள்வது இவைதான் மதத்தின் அணிகலன்கள்.

இன்றைய மதவாதிகளைப் பார்க்கும் போது, திரைப்படத்தில் வில்லனுடன் வரும் அடியாட்கள்தான் நினைவில் வருகிறார்கள். காட்டுமிராண்டிகளாக, கொலைகாரர்களாக மாறி நிற்கும் இந்தக் கோணாங்கித் தலைகளால், இறைகள் சாலை ஓரங்களில் முள் வேலிக்குள் இருக்கும் அரசியல் தலைவர்களின் சிலைகள் போல சிக்கலில் நிற்கிறார்கள். இனி, இவைகளுக்கு விடுதலை கிடைக்குமா என்பது கேள்விக்குறிதான்.

மனிதர்களுக்கு என்று, தனி மகத்துவம் உண்டு! ஏனைய உயிர்களுக்கு இல்லாத மகத்தும் அது! உணவு தேடுதல், உண்டு உறங்கி உயிர் வாழ்தல், இனப்பெருக்கம் செய்தல் என்பவனவற்றில் மனிதனுக்கும் விலங்கிற்கும் பெரிய வேறுபாடுகளில்லை.

ஆளுகை செய்யும் ஆற்றல், தனித்து இயங்கித் தன் நிலை உணர்தல், சிந்தித்துச் செயல்படுதல் ஆகிய குணங்கள் விலங்கிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுகிறது.

சித்தர் ஒருவர் சொல்லிய கருத்தை இவ்விடத்தில் முன் வைத்தால் சிறப்பாக இருக்கும். உயிரன்பும், ஆன்ம அறிவும் மானுடத்தை வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்லும் இறையழுக்கம் என்றார்.

உயிரன்பு என்பது உன் உயிரைப் போல பிறர் உயிரை எண்ணுதல். இன்று எந்த மதவாதிகள் இதனைக் கடை பிடிக்கிறார்கள்?

குறிப்பிட்ட மதத்தின் சார்பில் சென்னை சின்னமலை முதமைச் சாலைப் பகுதியில் வழிபாட்டு நிலையம் ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் கூட்டமாக இவ்வழிபாட்டு நிலையத்திற்குச் செல்வதைப் பார்த்திருக்கிறோம்.

குடிசையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வழிபாட்டு நிலையம், இன்று விரிவாக்கம் கண்டு, ஐந்து நட்சத்திர விடுதி போன்று மாறி நிற்கிறது. அன்பைச் சொன்ன கடவுளைக் குறித்துப் பேசும் இந்தக் கபடதாரிகள், படித்திருந்தும், அறிவில் கைநாட்டுப் பேர்வழிகளாக உள்ள அம்மத மக்களை ஏமாற்றி பணம் பிடுங்கி, தங்களின் சொத்துக்களை பெருக்கிக் கொண்டிருப்பதை அனைவர் முகத்திலும் அடித்துச் சொல்லிக் கொண்டிருக்கிறது அந்த உயர்ந்த கட்டிடம்.

யாருக்காக அறக்கட்டளை என்ற பெயரில் இவர்கள் அந்த ஆடம்பரங்களை வளர்க்கிறார்கள்? ஆராய்ந்தால் அதிர்ச்சியே பதிலாக வரும். அரசியல்வாதிகள் ஆட்சி நடத்துவதாகக் கூறி மக்களிடம் வரிப்பணத்தை வாங்கி உண்டு கொழுப்பது போல. இது போன்ற அறக்கட்டளைகள் காணிக்கை என்ற பெயரில் மக்களின் குருதியை உறிஞ்சிக் குடித்து வளர்கின்றன.

ஒருமுறை, வருமான வரித்துறையினர் ஆய்வு செய்ய வருகிறார்கள் என்ற செதியறிந்து, அறக்கட்டளையின் கணக்கில் காட்டாத பல கோடி பணம் அவர்களிடம் மாட்டிவிடக் கூடாது என்பதற்காக கழிப்பறையில் வைத்து எரித்துச் சாம்பலாக்கினார்கள் என்ற செய்திகள் ஊடகங்களில் வந்தது. ஆதாரத்தோடுள்ள இந்தச் செய்தி உண்மை என்றாலும், எந்த அரசியல் கட்சியும் இவர்களுக்கு எதிராகக் களத்தில் இறங்கப் போவதில்லை. எல்லாம் வாக்கு வங்கி அரசியல்தான் காரணம்.

நாம் மறை நூல்களில் சொல்லப்பட்ட பலச் செய்திகளை உள்வாங்கிக் கொண்டால், இன்று கடவுளின் பெயரில் நடத்தப்படும் அத்தனை கூத்துக்களும் பொய்மையே என விளங்கும். ஆனாலும் முட்டாள்தனமாக அதனை நம்பிக் கொண்டு பயணிக்கிறோம். இது மூட நம்பிக்கைதான் எனச் சொல்வதை மனமும் ஒப்பவில்லை. இன்றைய சூழலில் ஆட்சி அதிகாரங்களை உறுதிப் பத்தும் இடமாக மதம் மாறி நிற்பதை யாராலும் தடுக்க முடியாமல் போனதற்கு மக்களின் மூட நம்பிக்கைதான் காரணம். இறைவன் வேறு எனினும், அவைகள் சொல்லிய கோட்பாடு ஒன்றுதான். மனித நேயம் காக்கும் ஒவ்வொரு சொல்லும் மதம் என்று குறிப்பிடப்படுகிறது. ஆனால், யார் இன்று அந்த நிலைப்பாட்டில் இருக்கிறார்கள்? மனிதக் குருதியை வேட்டையாடும் ஓநாய்கள் இன்று மதக் குருமார்களாக உருவம் கண்டிருக்கிறார்கள். மதமும், கறிக்கடை போல மனிதக் குருதி வாடயைச் சுமந்து நாறிக் கொண்டிருக்கிறது.

நமது அண்டை நாடான ஆப்கானிஸ்தானில் மதத்தின் பெயரில் ஆட்சி நடக்கிறது. ஆனால், அது மதக் கோட்பாடுகளை மதிக்கிறதா? இசுலாம் வழிமுறை சொன்ன தத்துவ நெறிகள் தத்துவப் பிழைகளாக அங்கே அரங்கேறுகின்றன.

உழைப்பவனின் வியர்வை நிலத்தில் விழுவதற்குள் அவனின் கூலியைக் கொடுத்துவிடு.. எனச் சொல்லும் இசுலாம் வழிமுறை, நன்னெறி இல்லா செயல்களை எப்படி ஊக்குவிக்கும்?

பசியோடு உன் வீட்டின் முன் ஒருவன் இருந்தால், அவனுக்கு உணவிட்டு நீ உனக்கான உணவை எடுத்துக் கொள். இதைத்தான் அல்லா விரும்புவான் என்று அன்பின் உச்சத்தை நிலைநாட்டிய மதத்தின் பெயரில் கொலையும் கொடூரமும் சிலரால் ஏற்படுவதை மதப்பக்தி என்று ஏற்பது மடமையாகத்தானே இருக்கும்.

**இன்னும் எழுதுவோம்... உணர்வோம்..!**



● பி.எம்.கணேஷ்

# ‘அனல்மின் நிலைய கழிவுகளால் ஆபத்து!’

> “ கோவை மாவட்டத்தில் ஏற்கனவே மேட்டுப்பாளையம், பொள்ளாட்சி, வால்பாறை ஆகிய மூன்று நகராட்சிகள் மட்டுமே இருந்த நிலையில், எதிர்வரும் நகர்புற உள்ளாட்சி தேர்தலில், புதிதாக காரமடை, மதுக்கரை, கூடலூர், கருமத்தம்பட்டி ஆகிய நான்கு நகராட்சிகள், உதயமாகியுள்ளது. இந்நிலையில் ஏழு நகராட்சிகள் இம்முறை தேர்தல் களத்தில் உள்ளது.

அனல்மின் நிலையத்தில் இருந்து வெளியேறும் சாம்பல் துகள்களால் தூத்துக்குடியில் உப்பு உற்பத்தி மற்றும் மீன்பிடி தொழில் ஏற்கெனவே பாதிப்படைந்துள்ள நிலையில் தற்போது தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் அனல் மின்நிலையம் ஆரம்பிப்பதற்கு முன்பே அங்கிருந்து வெளியேறும் உப்புநீர் குளத்தில் கலப்பதால் விவசாயம்; பாதிப்பிற்குக்குள்ளாகியுள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியில் சுமார் 13 ஆயிரத்து 77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழக அரசு அனல்மின் நிலையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இங்கு 660 மெகாவாட் வீதம் இரண்டு அலகுகளில் மின் உற்பத்தி செய்ய திட்டமிட்டு இதற்கான கட்டுமானப் பணிகள் தனியார் நிறுவனம் மூலம் தற்போது நடைபெற்று வருகிறது.

கடலுக்கு அருகில் அனல்மின்நிலையம் அமைந்துள்ளதால் இங்கு கட்டுமான பணிகளுக்காக குழி தோண்டும் பொழுது கடல் நீர் ஊற்று ஏற்படுகிறது. இந்த கடல் நீரை உடன்குடி அனல்மின் நிலையத்தில் இருந்து குழாய்கள் மூலம் குலசேகரபட்டினம் தருவைகுளம் கால்வாயில் கலக்க விடுகின்றனர். விவசாயிகளுக்கு நீர் ஆதாரமாக விளங்கும் இந்தக் குளம் முழுவதும் உப்பு நீராக்கி விவசாயத்திற்கு லாயக்கற்ற நிலைக்கு சென்றுவிட்டது என்று குற்றம்சாட்டுகின்றனர் உடன்குடி பகுதிமக்கள்.

அனல் மின் நிலையத்தின் இந்த செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்களை திரட்டி போராட்டம் நடத்த உள்ள சமூக ஆர்வலர் உடன்குடி குணசீலனிடம் பேசினோம். “உடன்குடி அனல்மின் நிலையம் அமைந்து உள்ள 1100 ஏக்கர் பரப்பு முழுவதும் நீர் பிடிப்பு பகுதி ஆகும் அனல்மின் நிலையத்தின் தென் மேற்கு பகுதியில் தான் தாமிரபரணி தென்கால் பாசன இறுதி குளமான எல்லப்ப நாயக்கன்குளம் உள்ளது. எல்லப்ப நாயக்கன் குளம் நிரம்பிய உடன் அதன் மறுகால் நிரம்பி அனல் மின் நிலைய மேற்கு பகுதியில் உள்ள கால்வாய் மூலம் குலசை தருவை குளம் எனப்படும் ஆதியாக்குறிச்சி குளம் நிரம்பி பின்னர் மணப்பாடு கடலுக்கு தண்ணீர் செல்லும். உடன்குடி அனல் மின்நிலைய பணிகள் ஆரம்பித்தவுடன் இந்த இயற்கையான கடல் நீர் உட்புகா வண்ணம் தடுக்கும்

அரணான இந்த பகுதியை சுமார் 8 அடி ஆழத்தினை மண் கொண்டு மூடினர்.

ஆரம்பத்தில் விவசாய பணிகளுக்கு என ரசீது பெற்று குளங்களில் இருந்து சட்டவிரோதமாக மண் எடுத்து நிரப்பினர். பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து லாரிகளை சிறைப்பிடித்ததை அடுத்து உடன்குடி அனல்மின் நிலையத்தின் பின்புறம் தென்மேற்கு பகுதியில் உள்ள பட்டா இடங்களில் இருந்து சட்டவிரோதமாக சுமார் 300 ஏக்கர் பரப்பில் 30 அடி ஆழம் தோண்டி மிகப்பெரிய மண் கொள்ளை நடத்தி அனல் மின்நிலைய பகுதியில் மண் கொண்டு நிரப்பினர்.

இதனால் இந்த பகுதி முழுவதும் கடல் நீர் உட்புகுந்து விட்டது. மேலும் எல்லப்ப நாயக்கன் குளத்தில் இருந்து குலசை குளத்திற்கு வரும் கால்வாயையும் சட்ட விரோதமாக மண் கொண்டு முடினர். அதே போல் கடந்த 2019ல் மழை காரணமாக வந்த வெள்ள நீர் அனல் மின்நிலைய கட்டுமான பணிகளுக்கு இடையூறாக இருந்ததால் இங்குள்ள தடுப்பணை ஒன்றை உடைத்தனர். அடுத்த தடுப்பணையை உடைக்க வந்த முயற்சியை நானும் பொதுமக்களும் ஒன்று சேர்ந்து தடுத்து நிறுத்தினோம்.

தற்போது அனல்மின் நிலைய கட்டுமான பணிகளில் வெளியேறும் உப்பு நீரை ரகசியமாக அனல்மின் நிலைய நிர்வாகம் குழாய்கள் மூலம் குலசை தருவை குள கால்வாயில் கலந்து விடுகின்றனர்.இதனால் குலசை தருவை குள தண்ணீர் முழுவதும் உப்பு நீராக மாறி விட்டது. பொதுமக்கள் இந்த தண்ணீரை குடிக்க மற்றும் குளிக்க முடியாத அவல நிலைதான் உள்ளது.

2007ம் ஆண்டைய சுற்றுசூழல் அனுமதி கொண்டு 2017 ல் இந்த அனல்மின் நிலைய பணியை நீர் பிடிப்பு பகுதியில் ஆரம்பித்தது சட்ட விரோதம் ஆகும். அது மட்டும் இல்லாமல் தற்போது உடன்குடி ஒன்றிய பகுதியின் நிலத்தடி நீராதாரத்தை உப்பு தண்ணீரை கொண்டு கெடுப்பது இந்த பகுதி மக்களுக்கு இழைக்கும் மிகப் பெரிய அநீதி ஆகும்.

## –அச்சத்தில் உடன்குடி மக்கள்

இந்த உப்பு நீரால் குலசை பகுதி தோட்டங்கள் பல அழிந்து வருகிறது. அனல் மின்நிலையம் ஆரம்பிக்கும் பட்சத்தில் உடன்குடி பகுதியின் பாராம்பரிய பனைத் தொழில் அழிந்து போவதுடன் தென்னை இ முருங்கை விவசாயமும் அழிந்து மீனவர்களின் வாழ்வாதாரமும் பாழாகும். சுமார் 5000 பேர் வேலை பார்க்க உடன்குடி வட்டார 1 லட்சம் பேர் வாழ்வாதாரம் இழக்கவும் சுற்றுசூழல் மாசுபடவும் இந்த அனல்மின் நிலையம் வழிவகுக்கும். சாதாரணமாக சூரிய ஒளி மூலம் 3 ருபாய்க்கு 1 யூனிட் மின்சாரம் தயாரிக்கும் செலவு அனல் மின்நிலையம் மூலம் செய்யும் போது 7 ரூபாய் ஆவதுடன் சுற்றுசூழல் மிகப்பெரிய மாசு ஏற்படுகிறது.

உடன்குடியில் வரும் காலங்களில் 6 அனல்மின் நிலையங்கள் வர உள்ளது தற்போது உப்புரில் ஆரம்பிக்க பட உள்ள அனல் மின்நிலைய பணி மக்கள் எதிர்ப்பால் உடன்குடிக்கு வர உள்ளதும் குறிப்பிடத்தக்கது. உடன்குடி அனல்மின் நிலைய பணிகள் முடிவடைந்து அனல்மின் நிலையம் ஆரம்பிக்கும் போது 2030 ம் ஆண்டு வாக்கில் அரசுக்கு ஆண்டு தோறும் 30 ஆயிரம் கோடி இழப்பு வரும் என்று சமிபத்திய ஆய்வறிக்கை தெளிவாக கூறுகிறது. சுற்றுசூழலுக்கும் மக்களின் வாழ்வாதாரத்துக்கும் கேடு விளைவிக்கும் உடன்குடி அனல்மின் நிலைய பணிகளை உடனே நிறுத்தி அங்கு சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தினை செயல்படுத்த வேண்டும் என்பதே உடன்குடி மக்களின் எதிர்பார்ப்பு என்ற அவர் இது குறித்து முதல்வர் தனிப்பிரிவிற்க்கு புகார் அனுப்பியுள்ளோம்" என்றார் நம்மிடம்.

இந்த குற்றச்சாட்டு குறித்து வருவாய்துறை அதிகாரிகள் வட்டாரத்தில் விசாரித்தோம். "இது குறித்து புகார் எதுவும் எங்களுக்கு வரவில்லை. மக்கள் புகார் அளித்தால் இது குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்" என்கின்றனர்.



உடன்குடி மக்களின் அச்சத்தைப் போக்க வேண்டிய கடமை தமிழக அரசுக்கு இருக்கிறது! ■

● பொன்.சௌபா

# ‘ரூ.100 கோடி கல்விக்கடன் இலக்கு!’

**மதுரை மாவட்டத்தில் வங்கிகள் மூலம் கல்விக்கடன் ரூ.100 கோடி வழங்க முயற்சிகள் மேற்கொண்டது குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மதுரை மாவட்டச் செயலாளர்கள் மா.கணேசன், கே.ராஜேந்திரன், மாநிலக்குழு உறுப்பினர்கள் இரா. விஜயராஜன், எஸ்.பாலா ஆகியோருடன் செய்தியாளர்களை சந்தித்தனர்.**

அப்போது பேசிய மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் பேசும்போது, “கொரோனா இவ்வுலகை ஆட்டுவிக்கும் நிலையில், இந்தியாவில் தற்போதைய 202122 ஆண்டுகளின் மாணவர்கள் கல்வி மற்றும் கல்வி சார்ந்த விஷயங்களை சமாளிப்பதில் பெரும் இடர்பாடுகள் உள்ளது. தேசிய அளவில் மாணவர்களுக்கான கல்விக் கடன் 54 சதவீதம் குறைந்துள்ள நிலையில், மதுரை மாவட்டம், தேசிய அளவில் மிகப்பெரும் சாதனை புரிந்துள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மூன்று முறை மாவட்ட அதிகாரிகள், வங்கி அதிகாரிகள், கல்வி அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகளை ஒருங்கிணைத்து நடத்தப்பட்டது. யாருக்கெல்லாம் நிராகரிக்கப்படுகிறது என்பதை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும், நியாயம் இல்லாத காரணத்திற்காக ஒரு மனு கூட நிராகரிக்க கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம். அதன் தொடர்ச்சியாக மதுரையில் முகாம்கள் நடத்தப்பட்ட 357 மேல்நிலைப்பள்ளிகளிலும் கல்விக்கடன் பெறுதல் பற்றி விழிப்புணர்வு உருவாக்கப்பட்டது.

அக்டோபர் 20 ஆம் தேதி மதுரை அமெரிக்கன் கல்லூரியில் மாபெரும் கல்விக்கடன் சிறப்பு முகாமில், 1355 மாணவர்கள் பதிவு செய்தனர். அன்றைய நாளிலேயே 11.81 கோடி ரூபாய் கல்விக்கடனாக வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து விண்ணப்பித்த அனைவரின் மனுக்களையும் முறையாக பரிசீலித்து கடன் வழங்கியதில் 100 கோடி என்ற சாதனை இலக்கு எட்டப்பட்டுள்ளது. இதுவரை மதுரை மாவட்டத்தை சேர்ந்த 1095 மாணவர்களுக்கு 99.29 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது. தேசியமயமாக்கப்பட்ட பன்னிரண்டு வங்கிகள் மூலம் 91.13 கோடி ரூபாயும், 28 தனியார் வங்கிகள் மூலம் 8.16 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக, கனரா வங்கி 38.21 கோடி, அதற்கடுத்து பாரத ஸ்டேட் வங்கி 27.89 கோடி ரூபாயையும் வழங்கியுள்ளது. மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி நிர்வாகம், வங்கி உயர் அதிகாரிகள் மற்றும் மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் இதற்கென தனியாக அமைக்கப்பட்ட குழுவின் மூலமாகவே சாத்தியமானது. தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் கல்விக்கடனுக்கான அலுவலகம் தனியாகவே செயல்பட்டு வருகிறது.

கல்விக்கடனில் 100 கோடி ரூபாய் என்பது ஒரு மிகப்பெரும் சாதனை, தொடர்ந்து தனியார் வங்கிகள் 8, தேசிய வங்கிகளில் 311 என்று மொத்தம் 319 மனுக்கள் இன்னும் பரிசீலனையில் உள்ளது. பெரும்பாலானவை ஏற்றுக்கொள்ளப்படலாம். அதேபோல் மருத்துவம் சார்ந்த படிப்புக்கான விண்ணப்பம் இனிமேல்தான் பெறப்பட உள்ளது. அதனையும் சேர்த்தால் ரூ.150 கோடி என்ற இலக்கை நம்மால் எட்ட முடியும். மதுரை மாவட்டத்தில் வழங்கக்கூடிய இத்தொகை, இந்தியஅளவில் மாபெரும் இலக்காகும்.

பொதுத்துறை வங்கிகள் 95, தனியார் வங்கிகள் 5, என இதுவரை 100 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதற்கு விளக்கம் கேட்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன் அளவு 54 சதவீதம் மட்டுமே, அதாவது ரூ. 40 முதல் 50 கோடி வரை வழங்கப்பட்டன. இது கொரோனாவுக்கு



முந்தைய கால பதிவு. வித்யாலட்சுமி போர்டல் தரவில் இதுவரை எத்தனை மாணவர்கள் பதிவு செய்துள்ளார்கள்? ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிராகரிக்கப்பட்ட தகவல்கள் என இதுவரை யாருக்கும் எதுவும் தெரியாது. யார் செயல்படுகிறார்கள் என்பது கூட இதுவரைக்கும் தெரியவில்லை.

மாவட்ட, மாநில வங்கி மேலாளர்களுக்கு அதனுடைய திறவு நம்பர் (பாஸ்வேர்டு) தெரிந்தால் மட்டுமே அவர்கள் அதை கண்காணிக்க முடியும். இதுகுறித்து ஒன்றிய நிதியமைச்சருக்கு இரண்டு முறை கடிதம் எழுதப்பட்டுள்ளது.

கல்வி நிலை குழுவில் உள்ள என்னால், தமிழகத்தில் மத்திய அரசு கல்வி கடன் கொடுப்பது ஏன் குறைந்து வருகிறது என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, ஐந்து மாதங்களுக்கு முன்பு சென்னை மும்பை, புனே, ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட மாநிலங்களில் ஆய்வு செய்யப்பட்டது. மும்பை, ஜம்மு காஷ்மீரில் கடந்த ஆண்டு அதிக அளவு வழங்கப்பட்டுள்ளது. மும்பையில் பல வங்கிகளில் தலைமையகம் உள்ளதால், சென்னை, மதுரையில் இது சாத்தியமாகவில்லை. இந்தக்கொரோனா காலத்திலும் இரண்டுமடங்கு கல்விக்கடன் மதுரை மாவட்டம் பெற்றுத் தந்துள்ளதை நாடாளுமன்ற நிலைக்குழு கூட்டத்தில் வெளிப்படுத்த உள்ளோம்.



சு.வெங்கடேசன்

வங்கிகளுக்கான கோரிக்கைகள்வட்டித் தொகையை வங்கிகள் மாணவர்கள் நிலுவைத் தொகையில் வைக்கக்கூடாது. நான்காண்டுகள் வட்டி தொகையினை ஒன்றிய அரசு கொடுக்கிறது, வட்டி தொகை கொடுக்காத போது அதை மாணவர்களின் நிலுவைத் தொகையுடன் வங்கிகள் சேர்க்கக்கூடாது. ஒன்றிய அரசு கொடுக்கும் போது அதை வட்டியில் வரவு வைத்துக்கொள்ள வேண்டும். இதுகுறித்து ஒன்றிய அமைச்சரிடம் வலியுறுத்த உள்ளோம்.

## - மதுரை எம்.பி. உறுதி

ரூ.40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை குறைந்த அளவிலான, கல்விக் கடன் கிடைக்காமல் கந்துவட்டிக்கு வாங்க கூடிய சூழ்நிலை உள்ளது அவர்களுக்கு உடனடியாக வழங்கிட வேண்டும் என்ற பரிசீலனையும் வழங்கியுள்ளோம். மேலும் கல்விக் கடன் வேண்டுமென்று விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களுக்கும் இந்த ஆண்டு பரிசீலனைக்கு உட்படுத்தி கிடைக்க முயற்சி எடுக்க உள்ளோம்.

ரூ.4 லட்சம் முதல் ரூ.5 லட்சம், மற்றும் ரூ.7 லட்சம் வரை ஒரு அளவிடு என்று கல்விக் கடனுக்கு வைக்கப்பட்டுள்ளது. கடன் கொடுத்தால் திரும்பி வராது என்று நினைத்து, வங்கிகள் பெரும்பாலும் நிராகரிக்க நினைக்கிறது. இது குறித்து ஆய்வு கூட்டத்தை வங்கி அதிகாரிகள், இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்தி குறைபாடுகளை களைவதற்க்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வித்யாலட்சுமி போர்ட திட்டத்தினையும் கூட பெரும் முயற்சி செய்தே இங்கு செயல்படுத்தியுள்ளோம். கல்விக்கடன் என்பது தலைமுறைக்கானது, இதை அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக அமுல்படுத்த முடியும். பத்து ஆண்டுகளுக்கு முன்பாக, கல்விக்கடன் கொடுக்க வங்கிகள் முன் வந்தன. தற்போது கடன் வழங்குவது, இறங்குமுகமாக, குறிப்பாக கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 54% வரை குறைந்துள்ளது.

பல மாணவர்களின் உயர்கல்விக்கு, பணமே பிரதானம் எனும் நிலையில், கல்விக்கடன்களே அதனை பூர்த்தி செய்யும். அதனைப்பெறுவதற்கு இருந்த தடைகளை அகற்ற, மதுரை மாவட்டத்தில் பெரும் முயற்சியெடுத்து துவக்கியுள்ளோம். இதை முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு தமிழகம் முழுவதும் செயல்படுத்த வேண்டும். தலைமுறையினை உருவாக்குவதற்கான பெரும் முயற்சியாதலால், வங்கிகள் கல்விக் கடன்களை மனிதாபிமான அடிப்படையில் அணுகி உதவிட வேண்டும். கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு 1300 கோடி ரூபாய் வரை கடன்தள்ளுபடி செய்யக்கூடிய வங்கிகள், மாணவர்களுக்கு தொடர்ந்து கல்விக்கடன் வழங்கலாமே'' என்கிறார், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன்.

கல்விக்கு கடன் வழங்குவதோடு நிறுத்தி விடாமல், அந்தக் கடனை அடைக்க, படித்து முடித்தவுடன் வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டிய கடமையும் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம்! ■




# நெல்லையில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் அமையுமா..?

"நம் தமிழர்களுக்கே உரித்தான மருத்துவம் சித்த மருத்துவம். எந்த பக்க விளைவையும் தராத அற்புதமான சித்த மருத்துவம், இப்பொழுது அதற்கே சிகிச்சை தேவைப்படும் அளவிற்கு பரிதாபமாக உள்ளது.

அலோபதி மருத்துவத்தை பேணி பாதுகாப்பதற்கு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழகமும் மற்றும் தமிழகம் முழுவதும் அலோபதி மருத்துவ மனைகளும், மருத்துவக் கல்லூரிகளும் ஏராளமாக உள்ளன. ஆனால் சித்த மருத்துவ கல்லூரி தமிழகத்தில் இரண்டே இரண்டு மட்டுமே உள்ளது. சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் இதுவரையிலும் உருவாக்கப்படவில்லை.

கடந்த 2021 ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட நிலை அறிக்கையில் தமிழ்நாட்டில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் உருவாக்கப்படும் என தமிழக நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியனும் தமிழ்நாட்டில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் நிறுவப்படும் என்றும் அது சென்னைக்கு அருகிலேயே நிறுவப்படும் என்றும் அறிவித்தார். தமிழ்நாட்டில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் உடனடியாக நிறுவப்பட வேண்டும், நெல்லையில் நிறுவப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கின்றனர் சமூக ஆர்வலர்களும், சித்த மருத்துவத் துறையினரும்.

சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த சித்த மருத்துவர் விஜய் விக்ரமனிடம் இது குறித்து கேட்டபோது,

"சித்த மருத்துவ கல்வியில் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம் மிக மிக அவசியமான



ஒன்று. ஆனால் நெடுங்காலமாக சித்த மருத்துவ பல்கலைக்கழகம் உருவாக்கப்படாததால் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் நிறுவ அரசுக்கு உத்தரவிட கோரி கடந்த 2014 ல் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு தொடர்ந்தோம். வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் உடனடியாக சித்த மருத்துவ பல்கலைக்கழகம் அமைக்க நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டது. அதுவும் நெல்லையில் அமைக்க வேண்டும் என்று கூடுதலாகவும் உத்தரவிடப்பட்டது. ஆனால் நெல்லையில் ஏராளமான அரசு நிலங்கள் இருந்தபோதிலும் சித்தமருத்துவக் பல்கலைக்கழகத்திற்கு நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட சில பிரச்சனைகளில் காலதாமதம் ஆனதால் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் நிறுவப்படவில்லை.

சித்த மருத்துவத்தை அடுத்த கட்ட வளர்ச்சிக்கு எடுத்துச் செல்ல சித்த மருத்துவ பல்கலைக் கழகமும், ஆராய்ச்சி நிறுவனமும் அவசியம் தேவை. சித்த மருந்துகள் குறித்த சந்தேகங்கள் முன் வைக்கப்படும் போது அந்த மருந்தின் முழு தன்மையையும் வெளிக்கொணர குறிப்பிட்ட மருந்தின் மீது பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முழுமையான ஆய்வு அறிக்கை வெளியிடப்பட வேண்டும். இதற்கு பல்கலைக்கழகமும், ஆராய்ச்சி நிறுவனமும் தேவை. நாம் சித்த மருத்துவ ஆராய்ச்சிகளை முறைப்படி மேற்கொள்ளாவிட்டால் பல சித்த மருந்துகளை பிற நிறுவனங்களும், பிற நாடுகளும் கைப்பற்றி விடும் அபாயம் உள்ளது.



டாக்டர் விஜய்விக்ரமன்

எனவே நமது பாரம்பரிய சித்த மருத்துவத்தை உலக அரங்கிற்கு எடுத்துச் செல்ல சித்த மருத்துவ ஆய்வு நிறுவனங்களும், சித்த மருத்துவ பல்கலைக்கழகமும் உடனடியாக நிறுவப்பட வேண்டும். தமிழகத்தில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் நிறுவப்படும் என்று தமிழக அரசு சமீபத்தில் அறிவித்து அதற்கான பணிகளை துவக்கியுள்ளது. சென்னையில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் உருவாக்கப்படும் என்று தெரியவருகிறது. பாளையங்கோட்டையில் இயங்கிவரும் சித்த மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகம் நான்கு ஏக்கருக்கும் குறைவான இடத்தில் இயங்கி வருகிறது.

இதனால் இடநெருக்கடி ஏற்பட்டு எந்த விரிவாக்கப் பணிகளும் செய்ய முடியாத நிலைமை உள்ளது. பாளையங்கோட்டை சித்த மருத்துவ கல்லூரி மருத்துவமனையை மேம்படுத்த தமிழக அரசு ரூபாய் 25 கோடி ஒதுக்கி இருந்தது. அந்தப் பணமும் பயன்படுத்தப்படாமல் உள்ளது. எனவே பாளையங்கோட்டையில் கூடுதலான அரசு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு அங்கு சித்த மருத்துவ கல்லூரி மருத்துவமனை நிறுவப்பட வேண்டும்.

சென்னையில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் நிறுவப்படும் அதேவேளையில் பாளையங்கோட்டையில் சித்தமருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் சித்த மருத்துவ பல்கலைக் கழகத்திற்கு என தனி மண்டல அலுவலகம் உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

**–எதிர்பார்ப்பில் சமூக ஆர்வலர்கள்**

மேலும் நமது மூலிகைகளை பாதுகாக்கும் வகையில் தேவையான பரப்பளவில் மூலிகைத் தோட்டம் ஒன்றும் உருவாக்கப்படவேண்டும்" என்றார்.

நெல்லையில் சித்தமருத்துவ பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்று குரல் கொடுக்கும் தேமுதிக மாநகர் மாவட்ட செயலாளர் மீனாட்சி சுந்தரத்திடம் இது குறித்து பேசிய போது, " கடந்த காலங்களில் சிக்கன் குனியா, டெங்கு போன்ற புதிய காய்ச்சல் வகைகள் பாடாய் படுத்திய போது கை கொடுத்தது நிலவேம்பு கசாயமும், பப்பாளி இலைச்சாறும் தான். சமீபத்தில் கொரானா தாக்குதலின் போதும் சித்த மருந்துகள் நன்கு பலன் கொடுத்ததை நாம் அறிவோம்.

எனவே நமக்கே உரித்தான சித்த மருத்துவத்தை பேணி பாதுகாப்பது நமது கடமையாகும். சித்த மருத்துவக் கல்வியை மேம்படுத்த சித்த மருத்துவ பல்கலைக்கழகம் மிக அவசியமான ஒன்று. உருவாக்கப்படும் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் நெல்லையில் உருவாக்கப்படவேண்டும். நெல்லையில் ஏராளமான அரசு நிலங்கள் உள்ளன. போதுமான நிலத்தை கையகப்படுத்தி சர்வதேச தரத்தில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும். மேலும் நெல்லையில் உள்ள சித்த மருத்துவ கல்லூரி மருத்துவமனை போதிய இடம் இன்றி இயங்கி வருகிறது.


மீனாட்சி சுந்தரம்

சமீபத்தில் கூட சித்த மருத்துவ கல்லூரியில் மேற்கூரை சில இடத்தில் பெயர்ந்து விழுந்தது. புதிய இடத்தில் அனைத்து வசதிகளுடன் சித்த மருத்துவ கல்லூரி மருத்துவமனையை உருவாக்குவதும் காலத்தின் அவசியம். எனவே ஒரே இடத்தில் சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் இரண்டையும் உருவாக்க வேண்டும். இதனால் தென் தமிழக மக்கள் பயன் அடைவார்கள். மேலும் தமிழகத்தில் கூடுதல் சித்த மருத்துவ கல்லூரிகள் உடனடியாக திறக்கப்பட வேண்டும். நம் மண்ணிற்கே உரித்தான பக்கவிளைவற்ற சித்த மருத்துவத்தை மேம்படுத்துவது நம் ஒவ்வொருவரின் கடமை"என்றார்.

நெல்லை சித்த மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் மத்திய சித்த மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் ஆய்வுப் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது. அங்கு இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மூலிகைகளின் சேகரிப்பு உள்ளது. இந்த ஆய்வுப் பிரிவு மூலிகைகள் குறித்த பல்வேறு தரப்பினரின் தகவல்களையும் ஆவணப்படுத்தி வருகிறது. நோயாளிகளுக்கு சித்த மருந்துகளை கொடுத்து அது குறித்தும் ஆய்வுகள் மேற்கொண்டு வருகிறது. இந்த பிரிவும் போதிய இடம் வசதியின்றி வேறு இடத்திற்கு மாற்றப்படும் சூழ்நிலையில் உள்ளது. இந்த ஆய்வுப் பிரிவு தனியாக வேறு இடத்திற்கு மாற்றப்பட்டால் சித்த மருத்துவம் பயிலும் மாணவியருக்கு போதிய பயன் இல்லாமல் போய்விடும்.

நெல்லையில் அரசுக்குச் சொந்தமான நிறைய நிலங்கள் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளன. அந்த இடங்களை கையகப்படுத்தி எதிர்காலத்தையும் கருத்தில் கொண்டு விசாலமான பரப்பளவில் நெல்லை சித்த மருத்துவ கல்லூரி மருத்துவமனை, சித்த மருத்துவ பல்கலைக்கழகம், மத்திய சித்த மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் ஆய்வு பிரிவு, நமது பாரம்பரிய மூலிகைகளை காப்பாற்றும் வகையில் மூலிகைத்தோட்டம் போன்றவற்றை உருவாக்க வேண்டும். நமது சித்த மருத்துவம் இந்தியா, இலங்கை, சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சை முறையாக உள்ளது. சித்த மருத்துவத்திற்கு பல்கலைக்கழகமும் ,ஆய்வு நிறுவனமும் உருவாக்கப்பட்டு சித்த மருந்துகள் மீது உரிய ஆய்வுகள் செய்யப்பட்டு ஆய்வு முடிவுகள் வெளியிடப்பட்டால் மட்டுமே உலக அளவில் சித்த மருத்துவம் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படும் மருத்துவ சிகிச்சை முறையாக மாறும்.

தமிழுக்கு உயர்வு செய்யும் தமிழக முதல்வர் நமது பாரம்பரிய சித்த மருத்துவத்தை காப்பாற்ற களம் இறங்குவாரா..?

● பொன்.சௌபா

FOLLOW UP

# உயிர் பிழைத்தவர்கள் உயிர் வாழ வேண்டி மனு!

**மதுரை அருகே கொரோனா தொற்றுக்கு பயந்து குடும்பத்துடன் விசம் அருந்தி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்திய நிலையில், உயிருக்கு போராடியவர்கள் மீண்டு வந்து மதுரை மாவட்ட ஆட்சியர் அனீஸ்சேகரிடம் உதவி கேட்டு மனு கொடுத்திருக்கிறார்கள்.**

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஒன்றியம், சக்கிமங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட கல்மேடு எம்ஜிஆர் நகர் பகுதியை சேர்ந்தவர் நாகராஜ். இவரது மனைவி லெட்சுமி. இவர்களுக்கு கணவரை பிரிந்து வாழும் ஜோதிகா (வயது 23) என்ற மகளும், 9 ம் வகுப்பு படிக்கும் ஆதிஸ்வரன் (வயது 15) மற்றும் 8 ம் வகுப்பு படிக்கும் சிபிராஜ் (வயது 13) இரண்டு மகன்கள் இவர்களுடன் ஜோதிகாவின் மகன் 3 வயது ரித்தீஷ் என அனைவரும் நாகராஜின் சொற்ப வருமானத்தில் குடும்பம் நடத்தி வந்தனர்.

இங்கேதான் விதி விளையாட ஆரம்பித்தது. திடீரென குடும்பத்தைக் காப்பாற்றி வந்த நாகராஜ் கொரோனா தொற்று ஏற்பட்டது. இதனால் தனியார் மருத்துவமனையில் பணம் செலவு செய்தும் உயிரைக் காப்பாற்ற முடியாமல் கடந்த 04-12-2021 அன்று உயிர் இழந்தார். இந்த சோகத்திலிருந்து மீளமுடியாமல் இருந்த குடும்பத்தினருக்குப் பேரிடியாக மீண்டும் வந்திறங்கிய கொரோனா ஜோதி காவையும் விட்டு வைக்கவில்லை. கல்மேடு பகுதியில் இருக்கும் ஆரம்பச்சுகாதார மருத்துவமனையில் பரிசோதனை செய்த போது கொரோனா தொற்று உறுதியானது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு தங்கை அனிதாவும் இறந்துவிட்டதால் பயம் அதிமாகிவிட்டது ஜோதிகாவிற்கு.


'கொரோனா'வுக்கு பயந்து குடும்பமே தற்கொலை!

தன் கணவரையும் மகள் அனிதாவையும் இழந்த தாய் லட்சுமிக்கு ஆறுதலாக இருந்த மகள் ஜோதிகாவும் இறந்துவிடுவாளோ! என்கிற அச்சம் இருந்ததால் குடும்பத்துடன் கூடி பேசி இனிமேல் கொரோனா நம்மை விடாது; அது நம் உயிரைப் பிடிப்பதற்குள் நாமே இறந்து விடுவோம் என்று முடிவெடுத்துவிட்டார்கள்.

ஜோதிகா மற்றும் அவரது தாய் ஆகிய இருவரும், 3 வயது சிறுவன் ரித்தீஷ் மற்றும் சிபிராஜுக்கு விஷத்தை (சாணி பவுடர்) குடிக்க கொடுத்தனர். மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த லட்சுமி ரித்தீஷ் மற்றும் சிபிராஜ் ஆகியோர் உயிர் பிழைத்தனர்.

இதுகுறித்து லட்சுமி பேசும் போது, "நாங்கள் வறுமையில் இருக்கிறோம். எங்களின் வறுமை தான் கொரோனா எனத்தெரிந்தும் விசம் அருந்தினோம். கலெக்டர் அய்யாவை பார்த்திருக்கிறோம் அவரும் எங்களுக்கு வீடு கட்டி தருவதாகவும் என் பேரன்களைப் படிக்க வைக்க உதவி செய்வதாகவும் கொரோனா நிவாரண நிதி சீக்கிரமே பெற்றுதர உதவி செய்வதாகவும் உறுதியளித்திருக்கிறார். தற்போது நாங்கள் அனைவருமே திண்டுக்கல் பக்கம் உள்ள என் தங்கச்சி ஊரில் இருக்கிறோம். தமிழக முதல்வர் எங்களுக்கு உதவி செய்வார் என்கிற நம்பிக்கை இருக்கிறது" என்றார்.

எமனின் வாயிலுக்கு சென்று மீண்டு வந்தவர்களுக்கு, வாழ வழிவகை செய்வது தமிழக அரசின் கடமை!



தென்னிந்திய சினிமாவில் டாப் நடிகைகள் என்றால் அது நயன்தாரா மற்றும் சமந்தா ஆகிய இருவர் மட்டுமே. தற்போது இவர்களுக்கு தான் தென்னிந்திய சினிமாவில் மார்க்கெட் உச்சத்தில் உள்ளது. அதிலும் சமந்தா விவாகரத்திற்கு பின்னர் முழு நேரமாக படங்களில் கவனம் செலுத்தி வருவதால் அடுத்தடுத்து கதை கேட்டு வருகிறாராம். ஹிந்தியில் முன்னணி தயாரிப்பு நிறுவனமான யாஷ் ராஜ் பிலிம்ஸ் நிறுவனம் சமந்தாவை அணுகி, மிகப்பெரிய தொகையை முன்பணமாக வழங்கியுள்ளதாகவும கூறப்படுகிறது. தெலுங்கு படத்திலேயே சமந்தா பயங்கர கவர்ச்சி காட்டுவார். இதுல ஹிந்தினா சொல்லவா வேண்டும். இனிமே சமந்தா காட்டுல அடைமழை தான். ஊ சொல்றியா மாமா பாட்டோட ஹிட்டு தான் இந்த பாலிவுட் வாய்ப்பு கிடைக்க காரணமாக இருக்கும் என சிலர் கூறி வருகிறார்கள். எது எப்படியோ சீக்கிரமே சம்முவ ஹிந்தி சினிமால பார்க்கலாம்.

# அடைமழை..!

## குடும்பத்திற்கு முதலிடம்..!

தனுஷ் ஐஸ்வர்யா பிரிவு குறித்து சினிமா பிரபலங்கள் பலரும் அவர்களுக்கு ஆறுதல் கூறி கருத்துக்களை பகிர்ந்து வருகின்றனர். அந்த வகையில் நடிகை கஸ்தூரி டிவிட்டர் பக்கத்தில் 'ஒரு நீண்ட கால உறவு முடிவுக்கு வரும்போது அது எப்போதும் வருத்தமாக இருக்கிறது. பொது கண்காணிப்பு என்ற கடுமையான பூதக்கண்ணாடியின் கீழ் அது நடக்கும்போது அது மிகவும் கடினமாகும். சம்பந்தப்பட்ட இருவருக்கு மட்டுமே அனைத்து விவரங்களும் தெரியும். வேறு யாருக்கும் தெரியாது, தெரியவேண்டிய அவசியமும் இல்லை' என பதிவிட்டுள்ளார். மேலும் மற்றொரு பதிவில், 'விவாகரத்து பற்றிய எண்ணங்கள்: பெற்றோருக்கு எவ்வளவு சரியானதாக இருந்தாலும், குழந்தைகளுக்கு அது எப்போதும் தவறாகும். எங்கள் மூத்தவர்கள் சரியாகச் சொன்னார்கள். குழந்தைகளின் நலனுக்காக ஒன்றாக இருக்க வேண்டும். இது உண்மையான ஒன்று. குழந்தைகள் வந்துவிட்டால், குடும்பத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும்' என பதிவிட்டுள்ளார்.

## அடுத்த அறிவிப்பு!

நயன்தாரா மற்றும் விக்னேஷ் சிவன் இணைந்து நடத்திவரும் ரவுடி பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்திற்கு காத்துவாக்குல ரெண்டு காதல் என்ற வித்தியாசமான டைட்டில் வைக்கப்பட்டுள்ளது. டைட்டிலுக்கு ஏற்றது போலவே இந்தப் படத்தில் இரண்டு கதாநாயகிகள் நடிக்கின்றனர். நயன்தாரா மற்றும் சமந்தா முதல் முறையாக இணைந்து நடிக்க இப்படத்தின் மீது எதிர்பார்ப்பு பல மடங்கு அதிகரித்துள்ளது. மேலும் ஹீரோவாக விஜய் சேதுபதி நடித்து வருகிறார். அனிருத் இசையில் ஏற்கனவே இரண்டு பாடல்கள் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. அதிலும் குறிப்பாக டு டு டு பாடல் இணையதளத்தில் சக்கை போடு போட்டது. இந்த நிலையில் அடுத்த பாடல் குறித்த முக்கிய அப்டேட்டை படக்குழு வெளியிட்டுள்ளது. அனிருத்தின் 10 ஆண்டுகால திரைவாழ்க்கையில் 25வது திரைப்படமாக உருவாகிவரும் காத்துவாக்குல ரெண்டு காதல் படத்தின் அடுத்த சிங்கிள் மிக விரைவிலேயே வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

## முதன் முறை..!

நடிகர் சூர்யா நடிப்பில் அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் வெளியான ஜெய்பீம் படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. உலகம் முழுவதும் இப்படத்திற்கு ஏராளமான பாராட்டுகள் கிடைத்தது. ஆனால் இந்த படத்திற்கு எந்த அளவுக்கு பாராட்டுக்கள் கிடைத்ததோ அதே அளவிற்கு சர்ச்சைகளும் வந்தது. இருப்பினும் இத்தனை பிரச்சனைகளை தாண்டி வெளியான ஜெய்பீம் படம் ரசிகர்கள் மத்தியில் அமோக வரவேற்பை பெற்றது. மக்களும் படத்திற்கு நல்ல ஆதரவு அளித்தனர். இந்நிலையில் தற்போது ஜெய் பீம் படத்திற்கு மேலும் ஒரு சிறப்பு அங்கீகாரம் கிடைத்துள்ளது. இது அந்த படத்திற்கு மட்டுமல்ல தமிழ் சினிமாவிற்கே கிடைத்த பெருமையாக பார்க்கப்படுகிறது.அதன்படி ஆஸ்கர் விருதுகளின் அதிகாரப்பூர்வ யூடியூப் பக்கத்தில் ஜெய் பீம் படத்தின் காட்சி இடம்பெற்றுள்ளது. அந்த யூடியூப் பக்கத்தில் ஒரு தமிழ் படத்தின் காட்சி இடம்பெறுவது இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

● ஜி.ஆர்.கண்ணன்

# 'ஐந்து லட்சம் கொடுத்தால் டிரான்ஸ்ஃபர்?'

**அரசு பணியிட மாறுதலுக்கு அமைச்சர் அலுவலகத்துக்கு ஐந்து லட்சம் கொடுத்தால் உடனே டிரான்ஸ்ஃபர் வாங்கி கொடுத்துடலாமென தேனி நகர திமுக பொறுப்பாளர் சூர்யா பாலமுருகன் பேசிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலான விவகாரம் தான் தேனி மாவட்ட திமுகவினர் மத்தியில் பரப்பரப்பாக பேசப்பட்டு வருகிறது.**

தேனி அருகே வடபுதுப்பட்டியை சேர்ந்த சூர்யா பாலமுருகன் தேனி நகர திமுக பொறுப்பாளராக இருந்து வருகிறார். இவருடைய மனைவி வடபுதுப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவராக மூன்று முறை வெற்றி பெற்றுள்ளார்.இநத முறை உள்ளாட்சி தேர்தலில் தேனி நகர்மன்ற தலைவராக வேண்டும் என்பதற்காக தனது அரசியலை தேனி நகர்ப்பகுதிக்குள் செய்து வந்தார் சூர்யா பாலமுருகன்.

திமுக தலைவர் ஸ்டாலின் தேனி மாவட்டத்தில் இரண்டு இடங்களில் நடைப்பெற்ற கிராமசபை கூட்டத்தில் தனது சொந்த ஊரான வடபுதுப்பட்டியில் நடத்த ஏற்பாடு செய்து பெரும் செலவு செய்து ஸ்டாலின் குட்புக்கில் இடம்பெற்ற சூர்யா பாலமுருகனுக்கு டிரான்ஸ்ஃபருக்கு பணம் கேட்பதாக வெளியான வீடியோ பெரும் தலைவலியை ஏற்படுத்தி உள்ளது. அந்த வீடியோவில், அரசுப் பணியிட மாறுதல் பெற வேண்டும் என்றால், அமைச்சர் அலுவலகத்துக்கு 5 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். அதற்கு முன்பணமாக 3 லட்ச ரூபாயும், இரண்டு லட்சத்தை காசோலையாக வழங்க வேண்டும். பணியிட மாறுதலுக்கான ஆணை கிடைத்ததும், காசோலையை வங்கியில் செலுத்தி பணமாக மாற்றிக்கொள்கிறேன்" என ஒருவரிடம் பேசியதாக வீடியோ ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவி வைரலாகி வருகிறது.



சூர்யா பாலமுருகன்

மேலும், "அரசுப் பணியிட மாறுதல் பெறுவதற்கு இதைவிட வேறு எவரும் குறைவாக பணம் வாங்குவதில்லை. இது போன்று பத்து நபர்களின் பணியிட மாறுதலுக்காக அமைச்சர் அலுவலகத்துக்கு 30 லட்சம் ரூபாயை முதலில் செலுத்த வேண்டும். நம்பிக்கையுடன் வந்தால் மட்டுமே இந்த வேலைகளை செய்து தர முடியும்" என சூர்யா பாலமுருகன் அந்த வீடியோவில் பேசியதாகக் கூறப்படுகிறது. சூர்யா பாலமுருகன் பேசியதாக சமூக வலைத்தளங்களில் வெளியான வீடியோ தேனியை தாண்டி தமிழகம் முழுவதும் வைரலாகி வருகிறது.

என்ன தான் நடந்ததென தேனி நகர திமுக பொறுப்பாளர் சூர்யா பாலமுருகனை நாம் தொடர்பு கொண்டு பேசினோம். "வீடியோ சர்ச்சைக்கு மூலக்காரணமே மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த ஜெயகாளை என்பவர் தான். அந்த வீடியோவில் இருப்பது நான் தான். ஆனால் அதில் வரும் பேச்சுக்கள் எதுவும் என்னுடையது இல்லை. என்னை போல ஒருவரை டப்பிங் பேச வைத்து பக்காவாக எடிட்டிங் செய்து சமூக வலைத்தளங்களில் பரப்பியுள்ளார்.

அந்த வீடியோவை வெளியிடுவதற்கு முன்பு என்னை தொடர்பு கொண்ட ஜெயகாளை ஐந்து லட்சம் பணம் தரணும் இல்லைனா சமூக வலைத்தளங்களில் பரப்பி அசிங்கப்படுத்தி விடுவேனென மிரட்டினார். தொடர்ந்து ஓரிரு நாளில் எனது வாட்ஸ்அப் நம்பருக்கு பெண் குரல் போல் பேசி வேலை வாங்கித் தருவதாக சொல்லி நான் அந்தப் பெண்ணிடம் பணத்தை பெற்றுக் கொண்டதாக

ஒரு ஆடியோ ரெக்கார்டிங் தயார் செய்துள்ளார். அந்த ஆடியோவை என் வாட்ஸ்அப் நம்பருக்கு போட்டு என்னிடம் 3 லட்சம் ரூபாய் கேட்டு மிரட்டினார்.

நான் எதற்கும் உடன்படாத காரணத்தில், டென்ஷனான ஜெயகாளை, எப்படி நகர்மன்ற தேர்தலில் ஜெயிச்சு சேர்மன் ஆகுறனு பார்ப்போம்னு சவால் விட்டு அந்த வீடியோக்களை சமூக வலைத்தளங்களில் பரவ செய்தார். தொடர்ந்து மிரட்டும் தொனியில் ஜெயகாளை செயல் இருந்ததால் அவர் மீது மாவட்ட எஸ்.பி.யிடம் புகார் அளித்துள்ளேன்.



ஜெயகாளை

தேனி திமுகவினர் மத்தியில் மட்டுமல்லாது பொதுமக்களிடமும் எனக்கு இருக்குற நற்பெயரை கெடுக்கும் விதமாக இத்தகைய செயல் நடந்துள்ளது. நான் பணம் கேட்டதாக வெளியான தகவலை உறுதி செய்தால் கட்சி தலைமை எடுக்கும் முடிவுக்கு கட்டுப்பட தயார். காவல்துறை கட்டாயம் ஜெயகாளை மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. காவல்துறை விசாரணையால் என் மீது சுமத்தப்பட்ட களங்கம் நீங்கும்" என்றார்.

சர்ச்சைக்குரிய வீடியோவை வெளியிட்ட மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தேனி மாவட்ட பொதுச்செயலாளர் ஜெயகாளையை நாம் தொடர்பு கொண்டு பேசிய போது, "தேனி திமுக நகர் பொறுப்பாளர் சூர்யா பாலமுருகன் வீடியோவில் பேசிய அனைத்து விஷயங்களும் உண்மை. அவரை போல டப்பிங் பேசி வீடியோ வெளியிட வேண்டிய அவசியம் எனக்கில்லை. பள்ளிக்கல்வித்துறையில் ஆசிரியர் பணியிட மாறுதலுக்கு தேனி நகர திமுக பொறுப்பாளர் சூர்யா பாலமுருகன் ஐந்து லட்சம் ரூபாய் பேரம் பேசுவதாகவும், அதற்கான வீடியோ ஆதாரம் தன்னிடம் இருப்பதாக திருவண்ணாமலையை சேர்ந்த நண்பர் ஒருவர் மூலம் எனக்கு வந்தது.

## –வீடியோ சர்ச்சையில் சிக்கிய தேனி நகர திமுக பொறுப்பாளர்

வீடியோவை ஒரு தடவைக்கு பலதடவை பார்த்து உறுதி செய்த பிறகு சூர்யா பாலமுருகனை தொடர்பு கொண்டு பேசினேன். உடனே பதற்றமான சூர்யா பாலமுருகன், சில நபர்களை அனுப்பி என்னை மிரட்டி அந்த வீடியோவை அழிக்க முயற்சித்தனர். இந்த வீடியோ விவகாரத்தில் சூர்யா பாலமுருகன் நடவடிக்கை சந்தேகத்தை ஏற்படுத்தியதால் அவர் பேரம் பேசிய வீடியோவை எனது இணைய பக்கத்தில் வெளியிட்டேன்.

அதனைத் தொடர்ந்து இன்னொரு பெண் ஒருவரிடம் அரசு வேலைக்கு பேரம் பேசும் ஆடியோ ஒன்றையும் என்னிடம் கொடுத்தார்கள். அதையும் வெளியிட்டேன். உடனே டென்ஷனின் உச்சத்திற்கு சென்ற சூர்யா பாலமுருகன் சில ரவுடிகளை அனுப்பி எனது செல்போனை கைப்பற்றி விட்டு , இது பொய்யான வீடியோ, பணத்திற்காக இப்படி பண்ணிட்டேனு என்னை வீடியோ எடுக்க முயற்சி பண்ணாங்க. நான் அதுக்கு ஒத்துக்காத காரணத்தினால் ஆளுங்கட்சி நாங்க தான் போலீஸ் ஸ்டேஷனில் வைத்தே ராமநாதபுரம் மணிகண்டன் மாதிரி கதையை முடிச்சுருவோம்னு மிரட்டிட்டு போன உடனே சூர்யா பாலமுருகன் என் மீது புகார் அளித்திருக்கிறார். எனக்கு மடியில் கனமில்லை என்பதால் நானும் சூர்யா பாலமுருகன் மீது புகார் கொடுத்துள்ளேன்.

ஆளுங்கட்சி பிரமுகராகவும், தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு நெருக்கமாக சூர்யா பாலமுருகன் இருப்பதால் காவல்துறை ஒருதலை பட்சமாக நடந்து கொள்வார்களோ என்ற அச்சமும் இருக்குது. தேவைப்படும் பட்சத்தில் வீடியோவில் சூர்யா பாலமுருகன் உடன் பேசிய நபர்களை அழைத்து வர தயாராக இருக்கிறேன். தமிழக முதல்வர் சூர்யா பாலமுருகன் வீடியோ விவகாரத்தில் சரியான முடிவை எடுப்பார் என்ற நம்பிக்கை உள்ளது. இல்லையென்றால் நீதிமன்ற படியேற தயாராகவே இருக்கிறேன்" என்றார்.

எதிர்கட்சியினர் மீது பண மோசடி வழக்கில் ஆர்வம் காட்டும் ஆளுந்தரப்பு சொந்த கட்சியினர் மீது எழும் குற்றச்சாட்டுகள் குறித்து கவனம் செலுத்துவார்களா...? ■

● க.சண்முகவடிவேல்




# தி.மு.க.வுக்கு 50; தோழமைக்கு 15..!

> “ கொரோனா மூன்றாவது அலை பரவல் காரணமாக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தள்ளிப்போகும் என்ற கருத்து நிலவி வந்த நிலையில் தான் ஜனவரி 17ம் தேதி அரசாணைகளை வெளியிட்டு அந்த நினைப்பைத் தகர்த்தெறிந்திருக்கின்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

அதேபோல தமிழகத்தில் மொத்தமுள்ள 21 மாநகராட்சிகளில் 11 மாநகராட்சி பெண்களுக்கு என்ற திமுகவின் அறிவிப்பு 50 சதவிகிதத்தை கடந்த அறிவிப்பாகும் என்பதால் அரசியல் ஆர்வலர்கள் தரப்பில் பெருத்த வரவேற்பையும் பெற்றிருக்கின்றது. இது 50 சதவிகிதத்தையும் கடந்துவிட்டது.

இதனையடுத்து தமிழகம் முழுவதும் ஆளும் திமுக பெரும்பான்மையான மேயர் பதவிகளை கைப்பற்ற பல்வேறு யூகங்களை அமைத்துக்கொண்டிருக்கின்றது. அதேபோல் எதிர்க்கட்சியான அதிமுகவும் போட்டிக்கு தங்களை தயார் படுத்திக்கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் தமிழகத்தின் மையப்பகுதியான திருச்சி மாநகராட்சியை கைப்பற்றப்போவது யார் என்ற கேள்வியும், பெருத்த எதிர்ப்பார்ப்பும் தமிழக அரசியல் ஆர்வலர்கள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் பேசும்பொருளாக அமைந்திருக்கின்றது.

இந்தநிலையில், திருச்சியில் தற்போது 65 வார்டுகள் இருக்கின்றது. இதை வரும் தேர்தலுக்குள் 100 வார்டுகளாக உயர்த்த ஆளும் திமுக அரசு திட்டமிட்டு அதற்கான திட்ட வரையறை எல்லை பிரிப்பு என அனைத்தையும் செய்து முடித்திருந்தாலும் மக்களின் கருத்துக்கேட்பில் பல்வேறு முரண்பட்ட கருத்துகள் ஏற்படவே இந்த வார்டுகளின் எல்லை அதிகரிப்பை தற்சமயத்திற்கு கிடப்பில் போட்டிருக்கின்றது தமிழக அரசு.

இந்த சூழலில் திருச்சியில் உள்ள 65 வார்டுகளை திமுக மற்றும் அதன் தோழமைக் கட்சிகளுக்கு பங்கீடு செய்வதற்கான கூட்டம், திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் சமீபத்தில் நடந்தது.

திமுக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி முன்னிலையில் நடந்த கூட்டத்தில், தி.மு.க. காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி, ம.தி.மு.க, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

திருச்சி மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி ஆகிய உள்ளாட்சி அமைப்பு பதவிகளுக்கான தேர்தலில் வெற்றி வாய்ப்புகள் குறித்தும், கூட்டணி கட்சிகளுக்கு எந்தெந்த வார்டுகள்

ஒதுக்குவது குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், திமுக மத்திய மாவட்ட பொறுப்பாளர் வைரமணி, திருச்சி வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., மாநகரச் செயலாளர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தரபாண்டியன், ஸ்டாலின் குமார், கதிரவன் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

கூட்டத்தில், அமைச்சர் கே.என்.நேரு பேசியபோது, "திருச்சி மாவட்டம் திமுக கோட்டை என்று சட்டமன்ற தேர்தலில் நிரூபித்து உள்ளோம். அதற்கு, தோழமைக் கட்சிகளான உங்களது ஒத்துழைப்பும் முக்கிய காரணம். வருகின்ற நகர்புற உள்ளாட்சித் தேர்தலிலும் மாபெரும் வெற்றியை பெற வேண்டும் என்று எங்களது கட்சித் தலைமை விரும்புகிறது. அதற்கு நீங்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

# கே.என்.நேருவின் வியூகம் மேயர் தேர்தலில் கைகொடுக்குமா..?

உங்களுக்கு வழங்கும் சீட்டுகளின் எண்ணிக்கை, இடங்கள் குறித்து கருத்து வேறுபாடு எழலாம். அதெல்லாம் புறந்தள்ளி, நமது வெற்றிக்கு முழுமையாக பாடுபட வேண்டும். உங்களுக்கும், எங்களுக்குமான உறவு, சீட் ஒதுக்கீடு உடன் முடிந்து போவதில்லை. வேறு எந்த வகையில் எல்லாம் உங்களுக்கு உதவ முடியுமா அவற்றையெல்லாம் நான் உறுதியாக செய்வேன்.

அதேபோல கூட்டணிக்கட்சியினர் போட்டியிடும் வார்டுகளில் திமுக கட்சியினர் போட்டியிடுவதாகவே கருதி கூட்டணிக்கட்சியினரையும் வெற்றி பெற வைக்க அயராது பாடுபடுவோம்'' என்று கூறினார்.

கூட்டணிக்கட்சியினரிடையே நடைபெற்ற இந்த ஆலோசனைக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேருவின் பேச்சு கொஞ்சம் திமுகவின் தோழமைக் கட்சியினரை அதிர்ச்சியடைய வைத்திருந்தாலும் எந்த ஆட்சேபணையையும் தெரிவிக்காமல் அதான் அமைச்சரே முடிவெடுத்து சொல்லிட்டாருல்லன்னு பேசிகிட்டே முகம் சுழிக்காமல் நகர்ந்தனர்.

இதுகுறித்து கூட்டத்தில் கலந்துக்கொண்ட தோழமை கட்சியினர் சிலரிடம் பேசியபோது, ''நகர்புற உள்ளாட்சித் தேர்தலில் திருச்சி மாநகராட்சியை திமுக முக்கியமானதாகக் கருதுகின்றது. திருச்சி மாநகராட்சி மேயரை திமுக கைப்பற்ற வேண்டுமானால் 65



தேர்தல் ஆலோசனை கூட்டத்தில்....



வார்டுகள் கொண்ட திருச்சி மாநகராட்சியில் பெரும்பாலான வார்டுகளில் திமுக போட்டியிட வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றது.

அப்படி போட்டியிட்டால்தான் மாநகராட்சி மேயர் மற்றும் 4 கோட்டங்களின் தலைவர்கள் பதவியையும் திமுக கைப்பற்ற முடியும். மொத்தமாகவே திமுகவின் கைக்குள் திருச்சி மாநகராட்சி இருக்கும். அப்படி இருந்தால்தான் மாநகராட்சியை தரம் உயர்த்தவோ, மாநகராட்சியில் அமைச்சர் நேரு நினைத்த காரியங்களை திட்டமிட்டபடி செயல்படுத்தவோ முடியும் என்பதால் மொத்தமுள்ள 65 வார்டுகளில் 50 வார்டுகளை திமுக எடுத்துக்கொள்ள முடிவெடுத்து விட்டதை நேரடியாகவே எங்களிடம் தெரிவித்து வார்டுகளை கேட்டு நிர்பந்திக்க வேண்டாமே எனச்சொல்லி விட்டார். ஒரு சிலருக்கு கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் திமுகவுடன் நெடுங்காளமாக கூட்டணியில் இருக்கும் பலருக்கும் இதில் உடன்பாடுதான்" என்றனர்.

இதன்படி, திமுகவுக்கு 50 வார்டுகள், காங்கிரஸ், மதிமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்கு 15 வார்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதன்மூலம் திமுகவை சேர்ந்தவர் தான் மேயர் என்பது உறுதியாகி விட்ட நிலையில், துணைமேயர் பதவியையாவது தோழமை கட்சிகளுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பு திமுக கூட்டணி கட்சிகளுக்கிடையே நிலவி வருகின்றது.

கடந்த முறையும், அதற்கு முன்னரும் திருச்சி மாநகராட்சி மேயர் பதவி பெண்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. பெண் மேயர்கள் தான் திருச்சியின் ஆளுமையாக திகழ்ந்த நிலையில் எப்படியாவது மேயர் பதவியை திமுக கைப்பற்ற வேண்டும் என்ற நிலையில் அதற்கேற்றாற்போல் அறிவிப்பை வெளியிட்ட ஆளும் திமுக, இந்தமுறை திருச்சி மாநகராட்சி மேயர் பதவியை கைப்பற்றும். அதுவும் திருச்சி மாநகராட்சி மேயர் அரியணையை ஆண் அலங்கரிக்க விருக்கின்றார்.

அதேபோல் திருச்சி மாநகராட்சி மேயரை கைப்பற்ற அதிமுகவும் தனது தோழமை கட்சியான பாஜகவுடன் கைகோர்த்து சில பிற கட்சிகளின் துணையோடு எப்படியாவது திருச்சி மாநகராட்சியை கைப்பற்றவேண்டும். அப்படியில்லை என்றாலும் 65 வார்டுகளில் திமுகவுக்கு எதிர்குரல் கொடுக்கும் வகையில் வார்டுகளை கைப்பற்ற திட்டமிட்டு கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை திருச்சியில் நடத்திக்கொண்டிருக்கின்றது அதிமுக.

தமிழகத்தில் சென்னை, கோவையை அடுத்து திருச்சி மாநகராட்சியை கைப்பற்றப் போவது மட்டுமின்றி மேயராக யார் அமரப்போகின்றனர் என்ற பெருத்த எதிர்ப்பார்ப்பும் அரசியல் ஆர்வலர்களிடையே நிலவுகின்றது.

திருச்சி மேயர் ரேஸில் திமுகவில் அக்கட்சியின் மாநகரச்செயலாளர் அன்பழகன், திருவெறும்பூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.என்.சேகரன் முன்னிலையில் இருக்கின்றனர். வார்டுகளில் இவர்கள் வெற்றி வாய்ப்பினை தவற விட்டால் அமைச்சர் கே.என்.நேரு கை காட்டும் ஒருவரே திருச்சி மாநகராட்சி மேயராக தேர்ந்தெடுக்கப்படுவது உறுதிபடத்தெரிகின்றது.




ம.மு.கண்ணன்

# புதுக்கோட்டை நகராட்சிக்குப் பெண் வேட்பாளரா?

“ புதுக்கோட்டை நகராட்சித் தலைவர் பொறுப்புக்கு பெண்தான் வரவேண்டும் என்று அறிவித்திருப்பது இரு கழகங்களை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

## –அதிர்ச்சியில் கழகங்கள்

புதுக்கோட்டை நகராட்சிக்கு இதுவரை தலைவர்களாக வந்தவர்களில் ராமதிலகம் தவிர மற்ற அனைவருமே ஆண்கள்தான். ஆண்களே அதிகார நாற்காலியில் அமர்ந்து பழகிப்போனதுடன் அடுத்த தலைவர் தான்தான் என்ற நினைப்பிலேயே தேர்தல் வேலை பார்த்துப் பழகிப் போனவர்களுக்கு இப்போது பெண்தான் வரவேண்டும் என்பதில் திடீரென்று அதிர்ச்சிக்கு ஆளாகிப் போனது மற்ற கட்சிக் காரர்களைக் காட்டிலும் கழகங்கள்தான் அதிக வருத்தத்தில் இருக்கின்றன.

இந்த நிலையில் அரசின் அறிவிப்பு வந்தவுடன் திமுக சார்பில் கூட்டணிக் கட்சிகளையும் அழைத்து உடனடி ஆலோசனைக் கூட்டம் நடத்தப் பட்டது. அதில் அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செல்லப்பாண்டியன் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டு கூட்டணிக் கட்சிகளை குறிப்பாக காங்கிரஸ் கட்சியை வாங்கு வாங்கென்று வாங்கி விட்டார்கள். அதற்குக் காரணம் கடந்த மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் தேர்தலில் திமுக அதிக இடங்களைக் கைப்பற்றியிருந்தும் சில கோடிகளையும் துணைத்தலைவர் பொறுப்பையும் பெற்றுக் கொண்டு அதிமுகவை தலைவர் பொறுப்பில் அமர வைத்ததற்குக் காரணமே காங்கிரஸ் கட்சிதான் என்ற கோபத்தில் இருந்து இன்னும் திமுக விடுபடவே இல்லை. அத்தனையையும் திமுக பொறுப்பாளர்கள் காங்கிசாரிடத்தில் கொட்டித் தீர்த்து விட்டார்கள்.

குறிப்பாக பணம்தான் காங்கிரசுக்குக் குறி என்றால் அதை திமுகவிடமே கேட்டுப் பெற்றுக் கொண்டிருந்தால் மானம் போகாமல் இருந்திருக்கும். இப்போதும் ஒழுங்காக வெளிப்படையாக வேலை செய்வதாக இருந்தால் கூட்டணி தொடரும். இல்லையென்றால் திமுக அனைத்து வார்டுகளிலும் நின்று வெற்றி பெறும் என்று கடுமையாகப் பேசினார்கள். கடைசியில் சரியாக வேலை செய்வோம் என்று சொன்னதால் கடுமை குறைந்தது.

அது ஒருபுறம் என்றால் தலைவர் பொறுப்புக்குப் பெண் என்பதால் யாரைத் தலைவர் ஆக்குவது என்பதில் அனைவருக்குமே

பெரும் தயக்கமாக மாறி விட்டது. வெளியில் சொல்லிக் கொள்ளவும் பயம். இதுவரை கட்சி நிகழ்ச்சிகளுக்கு அழைத்து வந்தால்தானே அவர்களுக்கு அரசியல் தெரிந்து வைத்திருப்பார்கள். அனைவரையும் வீட்டுக்குள் பூட்டி வைத்து விட்டு ஆண்கள் மட்டும் களத்தில் நின்றிருக்கும் வேளையில் பெண்களை தலைவர் நாற்காலியில் அமர வைப்பது எப்படி என்ற குழப்பம் திமுக அதிமுக இரு தரப்பிலுமே உள்ளது.

அதிமுக நகரச் செயலாளர் பாஸ்கர் ஏற்கனவே நகராட்சித் தலைவர் பொறுப்புக்கு வரவேண்டும் என்று காய் நகர்த்திக் கொண்டிருந்தார். இப்போது வந்த அறிவிப்பில் மிகவும் சோர்ந்து போய் விட்டார். நகரச் செயலாளர் பாஸ்கரை அனைவருக்கும் தெரியும். அவரது மனைவியைக் கண்டது யார் என்ற கேள்வி புதுக்கோட்டை நகர வாக்காளர்கள் அனைவருக்கும் முதலில் எழும். அதனால் அவர் திகைத்து நின்றாலும் முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கரின் ஆலோசனைக்காகக் காத்திருக்கிறார்.



சீனிவாசன்

அதற்கு இன்னொரு காரணமும் உண்டு என்கிறார் கட்சியின் மூத்த நிர்வாகி ஒருவர். இதுவரை விஜயபாஸ்கரை எதிர்த்து ஒருவார்த்தை பேசியவர்கூட கட்சியில் நிலைத்து நிற்க முடியாமல் செய்து வைத்து விடுகிறார். குறிப்பாக ஓபிஎஸ் ஆதரவாளர்கள் அனைவரையும் ஓரம் கட்டியே வைத்திருக்கிறார். அதற்கு முன்னாள் நகர் மன்றத் தலைவர் ராஜசேகரும் உதாரணம். இப்போது அவர் நிற்க முடியாது என்ற போதிலும் அவரது மனைவியைக் களத்தில் இறக்கி விடுவதற்கோ வெற்றி பெறுவதற்கோ அமைச்சர் விஜயபாஸ்கர் ஒரு போதும் சம்மதிக்க மாட்டார். இந்தத் தேர்தலில் திமுகவை எதிர்த்து செலவு செய்து வெற்றி பெற முடியாது என்றாலும் களத்தில் நிற்கக்கூட பவர் உள்ள பலருக்கும் வாய்ப்புகள் இருக்காது என்றார். அது உண்மைதான் என்பதைப்போல அதிமுகவின் விருப்ப மனுப் பட்டியலில் பல விஐபிக்களும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

முன்னாள் நகர் மன்றத் துணைத் தலைவராகவும் சில காலம் பொறுப்புத் தலைவராகவும் இருந்த சேட் விஜயபாஸ்கரின் ஆதரவாளர் என்ற போதிலும் அவரது மனைவி அல்லது மகளை நிறுத்தும் முயற்சியில் அவர் இருக்கிறார். விஜயபாஸ்கரின் தேர்வாக அவர்களில் ஒருவராக இருந்தாலும் சேட்டைப் பொறுத்த மட்டிலும் கட்சியில் கடும் எதிர்ப்பு இருக்கும் என்று கருதப்படுகிறது.

இதே போல்தான் திமுகவில் வேர்மன் வேட்பாளர்களாகக் கருதப்பட்டதுடன் அதற்கான முழு வீச்சிலும் தேர்தல் களப்பணியில் இறங்கியிருந்தவர்களில் திமுக நகரச் செயலாளர் நைனா முகம்மதுஜஐ வடக்கு மாவட்டப் பொருளாளர் செந்தில் ஆகியோர். இப்போது பெண் வேட்பாளர் என்ற தகவலுக்குப் பின் உடனடியாக செந்திலின் மனைவி திலகவதியைத் தேர்தலில் நிற்க வைக்க முன் முயற்சி எடுத்து வருகிறார். திலகவதி பி.காம் பட்டதாரி என்பது குறிப்பிடத் தக்கது.

அதே போல் நைனா முகம்மதுவும் தனது மனைவியை தேர்தலில் நிற்க வைக்க முயற்சி எடுத்தாலும் கட்சித் தலைமை என்ன சொல்கிறதோ அதற்கேற்றவாறுதான் செயல்பட முடியும் என்பதால் உடனடியாக எதுவும் சொல்ல முடியாத நிலையில் தவிக்கிறார். அவரது தவிப்புக்கு இன்னொரு காரணம் என்னவென்றால் ஏற்கனவே நகராட்சியின் துணைத் தலைவர் பொறுப்பில் இருந்தவர். கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நகராட்சியின் 42வார்டுகளிலும் உள்ள மக்கள் பிரச்சினைகளை சம்பந்தப் பட்ட அதிகாரிகளிடம் எடுத்துச் சென்று தீர்வுகள் கிடைக்க வழிவகைகள் செய்து வந்ததால் அவருக்கென்று தனி இமேஜ் இருந்தது.

ஆனால் அந்த இமேஜ் அவரது மனைவியைத் தேர்தலில் நிறுத்துவதன் மூலம் வாக்கு வங்கியாக மாற்ற முடியுமா? சம்பந்தப் பட்ட அவரது வார்டில் வெற்றி பெற்று விட்டாலும் சேர்மன் சீட்டில் அமர வைக்க கட்சியின் மற்ற நிர்வாகிகள் ஒத்துழைப்புத் தருவார்களா என்ற பெரும் பிரச்சினை நைனா முகம்மதுவைச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றன.

மேலும் பெரியண்ணன், மற்றும் பெரியண்ணன் அரசு ஆகிய இருவருக்கும் உதவியாளராக இருந்து கட்சிப் பணியாற்றியவரும் மாவட்டம் முழுவதும் கடைக்கோடித் தொண்டனையும் அறிந்து வைத்திருக்கும் எம்.எம்.பாலு தனக்கு ஏற்கனவே கேட்டிருந்தும் எம்எல்ஏ சீட்தான் கிடைக்கவில்லை இப்போது எனது மனைவிக்கு

சேர்மன் சீட்டாவது வாய்ப்புக் கொடுங்கள் என்று கட்சித் தலைமை வரை கேட்டு வருகிறார்.

அதே போல் வீட்டுக்குள் முடங்கிப் போய்விடாமல் திமுகவின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் போராட்டக் களங்களிலும் மேடைகளிலும் முழங்கி வரும் பெண்கள் பட்டாளம் நிறைய உண்டு. அவர்களில் முக்கியமாவர்களாகக் கருதப் படும் தலைமைக் கழகப் பேச்சாளர் விஜயா, முன்னாள் சட்டமன்றக் கொறடா பெரியண்ணனின் மகளும் முன்னாள் எம்எல்ஏ பெரியண்ணன் அரசுவின் அக்காவுமான மணிமேகலை(இவர் முன்பு மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவராக இருந்தவர்) பொதுக்குழு உறுப்பினர் ராஜேசுவரி, சி.ஆர்.வி.சித்ரா உள்ளிட்ட பல பெண்கள் திடீர் மகிழ்ச்சியிலும் ஆர்வத்திலும் இருக்கிறார்கள். தங்களுக்கு கவுன்சிலர் வாய்ப்புக் கிடைத்தால் எளிதில் வெற்றி பெற்று விடலாம் என்பதோடு சேர்மன் சீட்டும் தலைமை மனசு வைத்தால் கிடைத்து விடும் என்பதில் களத்தில் இறங்கத் தயாராகி வருகிறார்கள். ஆனால் இப்போதைக்கு எதுவும் சொல்ல மறுத்து வருகிறார்கள்.



மல்லிகா கணேசன்

திமுக கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் மதிமுக, சிபிஐ, சி.பி.எம், காங்கிரஸ், தமிழக வாழ்வுரிமைக் கட்சி என பல கட்சிகளிலும் சில வார்டுகளைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கேட்கும் வார்டுகளை ஒதுக்கி விட்டால் திமுகவிற்கு எதுவும் மிஞ்சாது என்ற கணக்கு வந்ததால் திமுக சார்பில் கோபப் பட்டிருக்கிறார்கள். தலா ஒரு வார்டாவது வேண்டும் என்று அடம் பிடித்து வருகிறார்கள். ஆனால் 42வார்டுகளிலும் திமுகவை மட்டும்தான் நிறுத்த வேண்டும் என்று கட்சிக்காரர்களின் வற்புறுத்தலாகவும் இருந்து வருகிறது.

திமுக அனைத்து வார்டுகளையும் குறி வைத்தாலும் அதிமுக சார்பில் ஆளும் கட்சியைத் துணிச்சலாக எதிர்க்க யாரும் முன்வர தயக்கம் காட்டி வருகிறார்கள். செலவு செய்ய முடியாது என்ற பயம்தான் காரணமாக இருக்கிறது என் பொதுவான கருத்தாக இருந்தாலும் அம்மா பேரவையைச் சேர்ந்த சீனிவாசன் கூறுகையில் ஆளும் கட்சி வேண்டுமானால் அதிகார பலத்தில் இருக்கலாம். ஆனால் அதிமுக தொண்டர்கள் யாரும் சோர்ந்து போய்விடவோ சோரம் போகவோ கிடையாது.

அதிமுக அமைச்சரவையில் இருந்த பலர் இப்போது திமுக அமைச்சரவையில் இருக்கிறார்கள். அவர்கள் கட்சி மாறினார்களே தவிர தொண்டர்கள் அவர்கள் பின்னால் போகவில்லை. வாக்கு வங்கியைப் பொறுத்த அதிமுக தொண்டருக்குத் தெரிந்ததெல்லாம் எம்ஜிஆர், இரட்டையிலை, அம்மா. இதுதான் அவனுக்குத் தாரக மந்திரம். அதனால் வாக்குகளைப் பொறுத்த மட்டிலும் அதிமுக வேட்பாளர்களுக்குத்தான் அதிகமாக விழும். ஆதன் எதிரொலி புதுக்கோட்டை நகராட்சிக்கு மட்டும் என்றில்லை. தமிழகம் முழுவதும் எதிரொலிக்கும். விராலிமலையில் விஜயபாஸ்கர் செய்து வைத்திருக்கும் பணிகளை விட புதுக்கோட்டை நகருக்குள் செய்திருக்கும் பணி அதிகம். அதுவே வெற்றியைப் பெற்றுத் தரும் என்று அதிரடியான குண்டைத் தூக்கிப் போட்டார்.

இதற்கிடையில் அதிமுகவிற்கு போதிய அளவிற்குக் கவுன்சிலர்கள் வெற்றி வாய்ப்புக் கிடைக்காது என்று நிலை வந்தால் தோல்வி என்ற நிலைக்குப் பொறுப்பேற்றுக் கொள்ளாமல் தவிர்த்துக் கொள்வதற்காக நகராட்சித் தலைவர் பொறுப்பை பாஜகவிற்கு ஒதுக்கிவிடவும் அதிமுக தயாராக இருக்கிறது. அப்படி வரும்போது புதுக்கோட்டை மாவட்ட பாஜக துணைத் தலைவராக இருக்கும் ஏவிசி கணேசனின் மனைவியும் தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணைய உறுப்பினரின் தாயாருமான மல்லிகாவிற்கு ஒதுக்க வாய்ப்புள்ளதாக அதிமுகவினரே தெரிவிக்கின்றனர். மல்லிகா எம்ஏஐஐ எம்பில் முடித்திருக்கிறார்.

ஆளும் கட்சியான திமுக வெளிப்படையாகச் சொல்லா விட்டாலும் புதுக்கோட்டை நகராட்சிக்கு பெரியண்ணனின் குடும்பத்திற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்பதற்காகவே மணிமேகலையை நகராட்சித் தலைவர் ஆக்கும் முயற்சியாகத்தான் பெண் நகராட்சியாக அறிவித்தது என்றும் அதற்கான அனைத்துப் பணிகளையும் திமுக தலைமை செய்திருக்கிறது என்றும் பரபரப்பாகப் பேசப் பட்டும் வருகிறது.

எதுவானாலும் இன்னும் சில தினங்களில் அனைத்தும் வெளிச்சத்திற்கு வந்து விடும் என்பதே இப்போதைய நிலையாக இருக்கிறது.



கே.ஆர்.உதயகுமார்

# நகராட்சி தலைவர் பதவிக்கு பழங்குடியின பெண்!

**தமிழகத்தில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 489 பேரூராட்சிகள் அடங்கிய நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு தேர்தல் நடக்கவுள்ளது. இதற்காக, புதிதாக உருவாக்கப்பட்ட, விரிவாக்கப்பட்ட உள்ளாட்சிகளின் வார்டுகள் மறுவரையறை செய்யப்பட்டு உள்ளன.**

அதன்படி தமிழகத்தில் உள்ள 138 நகராட்சிகளில் ஒரு நகராட்சி தலைவர் பதவி பழங்குடியினருக்கு நீலகிரி மாவட்டம் நெல்லியாளம் நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்யபட்டுள்ளது. அதுவும் பெண்களுக்கு ஒதுக்கபட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் பூர்வகுடிகளாக தோடர், பனியர், இருளர், கோத்தர், காட்டு நாயக்கர், குரும்பர், அலு குரும்பர், பெட்ட குரும்பர் உள்ளிட்ட பழங்குடியின மக்கள் பண்டைய காலந்தொட்டு வசித்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த 2019ல் உள்ளாட்சி தேர்தல் வரையறையின்போது கூடலூர் நகராட்சி பழங்குடியினருக்காக ஒதுக்கபட்டது. இதனிடையே தற்போது கூடலூர் நகராட்சி எஸ்.சி., (பெண்) க்கு ஒதுக்கீடு செய்யபட்டு நெல்லியாளம் நகராட்சி தலைவர் பதவி பழங்குடியின (பெண்) க்கு ஒதுக்கீடு செய்ய பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு நீலகிரியில் வாழும் பழங்குடியின மக்கள் மத்தியில் மகிழ்ச்சியையும், நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இது தவிர நீலகிரி மாவட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் 4 நகராட்சிகளில் ஊட்டி மற்றும் குன்னூர் நகராட்சிகளின் தலைவர் பொறுப்புகள் பெண்களுக்கான பொது பொறுப்புகளாக மாறியுள்ளன. இதனால்

பெரும்புள்ளிகள் பலரும் தேர்தலில் களமிறங்க வாய்ப்புள்ளது.

கூடலூர் நகராட்சி பட்டியலின பெண்தலைவருக்கான பொறுப்பாகவும், நெல்லியாளம் நகராட்சி பழங்குடியின பெண் தலைவ ருக்கான பொறுப்பாகவும் மாறி உள்ளன.

மாவட்டத்தில் உள்ள 11 பேரூராட்சிகளில் சோலூர் மற்றும் தேவர்சோலை பேரூராட்சிகளின் தலைவர் பொறுப்புக்கள் பழங்குடியின பெண் தலைவருக்கான பொறுப்புகளாகவும், கோத்தகிரி, ஓவேலி, கீழ்குந்தா, அதிகரட்டி, உலிக்கல் ஆகிய 5 பேருராட்சிகள் பட்டியலின பெண் தலைவர்களுக்கான பதவிகளாக அறிவிக்கபட்டு உள்ளன. நடுவட்டம் பேருராட்சி பொது பதவியாக அறிவிக்கபட்டு உள்ளது. கேத்தி, ஜெகதளா, பிக்கட்டி பேரூராட்சிகள் பெண் தலைவர்களுக்கான பொது பதவிகளாக அறிவிக்கபட்டு உள்ளன.

இதன் மூலம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சி, நகராட்சி தலைவர் பொறுப்புகளும் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யபட்டு உள்ளது குறிப்பிடதக்கதாகும். நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் இட ஒதுக்கீடு அறிவிப்பை தமிழக அரசு வெளியிட்டதன் மூலம் உள்ளாட்சி தேர்தல் பணிகள் சூடுபிடிக்க தொடங்கி விட்டது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சி, நகராட்சி தலைவர் பொறுப்புகளும் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யபட்டு உள்ளது. இதனிடையே இரண்டு முறை





## –நெகிழ்ச்சியில் நெல்லியாளம் மக்கள்

ஒத்தி வைக்கப்பட்ட தி.மு.க., நேர்காணல் நடந்து முடிந்துள்ளது. ஆனாலும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை இறுதி செய்வதில் குழப்பம் நீடிக்கிறது. அ.தி.மு.க., தரப்பு தி.மு.க., வினரின் வேட்பாளர்களின் பட்டியல் வெளியான பிறகு தங்களது வேட்பாளர்களை அறிவிக்கவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நீலகிரி மாவட்டத்தில் நடைபெறவுள்ள நகர்புற உள்ளாட்சி தேர்தலில் தனலவர் பதவிகளுக்கு 100 சதவீதம் பெண்களே போட்டியிடும் நிலையில், நீலகிரி தேர்தல் வரலாற்றில் கவனிக்கதக்க விஷயமாக உள்ளது. ■




● கே.ஆர்.உதயகுமார்

# கோவை மேயர் தேர்தலில் களமிறங்கும் பெண்கள்!

**“ தமிழக தேர்தல் களத்தில் கடந்த பத்தாண்டுகளாகவே கோவை மாவட்டம் தற்போது ஆளுங்கட்சியாக உள்ள தி.மு.க.,வுக்கு மிகப் பெரிய சவாலாகவே இருந்து வருகிறது. கடந்த 2021 சட்டமன்ற தேர்தலில் தமிழகத்தில் தி.மு.க., கோட்டையை கைப்பற்றினாலும், கோவையில் ஒரு தொகுதியைக் கூட பிடிக்க முடியவில்லை. இதனால் முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவை மீது தனி கவனம் செலுத்த தொடங்கினார்.**

அதன்படி கோவைக்கென்றே பொறுப்பு அமைச்சராக செந்தில் பாலாஜியை அனுப்பி வைத்து கோவையை அ.தி.மு.க., வினரின் ஆளுமையில் இருந்து மீட்டெடுக்க வேண்டும் என்பது அவருக்கான "அசைன்மெண்ட்" ஆக வே கொடுக்க பட்டது. மேலும் இதற்காக அவருக்கு முழு பவரும் வழங்கபட்டது. மேலும் எதிர்வரும் நகர்புற உள்ளாட்சி தேர்தலில் பெரும்பாலான இடங்களை தி.மு.க., கைப்பற்றி காட்ட வேண்டும் என்பதும் முதல்வரால், அவருக்கு வழங்க பட்டபணி.

இந்நிலையில் கோவைக்கு வந்து குடியேறிய அமைச்சர் செந்தில் பாலாஜி கோவையை ஆராய்ந்து பார்த்ததில் தி.மு.க., படு வீக்காக இருந்துள்ளது. இதனை தொடர்ந்து கரூரிலிருந்து ஒரு மிகப் பெரிய டீமை கோவையில் இறக்கி அவர்களை வீடு எடுத்து தங்க வைத்து பணியாற்றி வருகிறார். இது உள்ளூர் உடன் பிறப்புகளுக்கு தர்சங்க டமான சூழலை உருவாக்கியிருந்தாலும், கள நிலவரம் கருதி தலைமையும் அதை கண்டு கொள்ளவில்லை.



மீனாலோகு

கோவை மேயர் பதவியை திமுக வெற்றிகொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் 100 வார்டுகளுக்கும் கரூர் திமுக நிர்வாகிகளை பொறுப்பாளர்களாக நியமித்து அமைச்சர் செந்தில் பாலாஜி மாஸ்டர் பிளானுடன் களம் இறங்கியுள்ளார்.

கோவை மாநகராட்சியில் உள்ள 100 வார்டுகளில், 1,290 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு பூத்துக்கும் தலா 10 பேர் கொண்ட பூத் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. அந்தந்த ஏரியாவை சேர்ந்தவர்களை, மக்களுக்கு சேவை செய்யக்கூடியவர்களை உறுப்பினர்களாக நியமிக்க

அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பூத்துக்கும் பொறுப்பாளராக, கரூர் மாவட்ட நிர்வாகிகளை அமைச்சர் செந்தில் பாலாஜி நியமித்திருக்கிறார்.

கோவை மாநகராட்சியில் 50 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ள நிலையில் மேயர் பதவி ஆண்களுக்கு மாறும் என எதிர் பார்த்து காத்திருந்த வேளையில் பெண்களுக்கான (பொது) ஒதுக்கீடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தி.மு.க., தரப்பில் கோவை மாநகராட்சி முன்னாள் துணை மேயரும், எம்.எல்.ஏ., தற்போது கோவை கிழக்கு மாநகர் கழக பொறுப்பாளருமான கார்த்திக்கின் மனைவி இளஞ் செல்வி போட்டியிடுகிறார். இவர் ஏற்கனவே கடந்த 20-11-2016 கால கட்டத்தில் மாமன்ற உறுப்பினராக இருந்தவர் அதனால் இவர் கோவை மக்களிடம் பரிச்சயமானவர்தான்.

மேலும் இரண்டு முறை மாநகராட்சி கவுன்சிலராக பொறுப்பு வகித்தவரும் தற்போது பொதுக்குழு உறுப்பினராக உள்ள மு. மா.ச. முருகனின் மனைவி சாந்தி போட்டியிடுகிறார். இவரது குடும்பம் தி.மு.க., பாரம்பரியமிக்க குடும்பம் அண்ணாவும் மு. மா.சண்முகசுந்தரம் நெருங்கிய நண்பர்கள் அண்ணா கோவை வரும் போது இவர் வீட்டில் தான் தங்குவார்.

இது தவிர கோவையில், மு. மா.ச.அறக்கட்டளை மூலம் நலிந்தோருக்கு உதவிகள் செய்தும், மாணவ மாணவிகளை ஊக்குவிக்க விளையாட்டு போட்டிகள் நடத்தி கோப்பைகள், பரிசுகள் வழங்கி உற்சாகபடுத்தி வருகிறார். கடந்த சட்டமன்ற தேர்தலில் கோவை தெற்கு தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கேட்டிருந்தார்.



இளஞ்செல்வி கார்த்திக்



சாந்தி முருகன்



அமிர்தவள்ளி

மேலும் வடவள்ளி பேரூராட்சி மன்றத்தில் 15 ஆண்டுகள் தலைவராக பொறுப்பு வகித்த சண்முகசுந்தரம் அவரது மனைவி அமிர்தவள்ளி போட்டியில் உள்ளார். இவரும் வடவள்ளி பேரூராட்சியில் 10 ஆண்டுகள் தலைவராக பொறுப்பு வகித்தவர். சண்முகசுந்தரம் கடந்த சட்டமன்ற தேர்தலில் கோவை வடக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தவர் என்பது குறிப்பிடதக்கது.

மேலும் கோவை மாநகராட்சியில் நான்கு முறை கவுன்சிலராக இருந்த மீனாலோகு இம்முறை மேயர் பதவியை பிடிக்க போட்டியிடுகிறார். இவரும் மக்கள் மத்தியில் பரிச்சயமானவர்.



இதற்கிடையே அமைச்சர் எ.வ.வேலுவுக்கு நெருக்கமானவரின் மனைவியும், மாநில நிர்வாகியுமான பெண் ஒருவர் தன்னை மேயர் வேட்பாளராக அறிவித்து கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

மொத்தத்தில் கோவை மேயராக இவர்களில் யாராவது ஒருவர் தான் மேயர் வேட்பாளராக இருக்க கூடும் என்பது கோவை உடன் பிறப்புகளின் ஆருடமாக உள்ளது. ■

● க.சண்முகவடிவேல்


இந்துமதியுடன் ராம்குமார்...



ஜனனியுடன் ராம்குமார்...

# பெண்களின் வாழ்க்கையில் விளையாடிய ரெயில்வே ஊழியர்..!

**பொள்ளாச்சியில் ஒரு திருநாவுக்கரசு போல் திருச்சியில் தாலி கட்டிய மனைவிக்கு தெரியாமல் பல பெண்களுடன் உல்லாசம் அனுபவித்த ராம்குமார் காமலீலைகள் தற்போது வெளிவரத் துவங்கியிருக்கின்றது.**

திருச்சி செந்தண்ணீர்புரம் பகுதியில் வசிப்பவர் ராம்குமார். இவர் திருச்சி பொன்மலை ரயில்வே பணிமனையில் பணியாற்றி வருகின்றார். இவருக்கும் திருச்சியை சேர்ந்த பட்டதாரி பெண் ஜனனி என்பவருக்கும் கடந்த 2016ம் ஆண்டு திருச்சி ஜங்சன் அருகேயுள்ள ரயில்வே திருமண மண்டபத்தில் உற்றார் உறவினர் முன்னணியில் திருமணம் நடைபெற்றது.

ராம்குமார்-ஜனனி திருமண பந்தம் மிகவும் ரம்மியமாகவும், மகிழ்ச்சியாகவும் சென்றுக்கொண்டிருப்பதாக பெண் வீட்டார் நினைத்துக்கொண்டிருந்தனர். திருமணமாகி இருவரும் தனிமையில் இருக்கும்போது பல்வேறு சங்கடங்களை ஜனனி சந்தித்திருக்கின்றார். இதுகுறித்து பெற்றோரிடம் எப்படி தெரிவிப்பது எனத்தெரியாமல் விழிபிதுங்கியிருக்கின்றார்.

உறவுக்காரர்கள் மூலம் அமைந்த வரன் என்பதால் பெண் வீட்டாரும் ஜனனியின் கணவர் ராம்குமார் மீது கண்மூடித்தனமான அக்கறையும், பாசத்தையும் தொடுத்திருக்கின்றனர். இதை தமக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்ட ராம்குமார் அவ்வப்போது அந்த செலவுக்கு, இந்த செலவுக்கு என ஜனனியின் பெற்றோரிடமிருந்து நகையாகவும், ரொக்கமாகவும் பல லட்சங்களை

சுருட்டிக்கொண்டிருக்கின்றார்.

இந்தநிலையில் ஜனனி திருமணமான 5 மாதத்தில் தனது தாய் பிரமிளாவிடம் 'அவரு என்ன இரவு நேரத்தில பல்வேறு கோணங்களில் வீடியோ எடுத்து வச்சிருக்கார்' என்று சொல்லி கதறியிருக்கின்றார். ஏம்ப்பா 'மாப்ள மேல அபாண்டமா சொல்ற, அவரு வேறு ஏதாவது வீடியோ பார்த்திருப்பாருன்னு' அசால்ட்டா விட்டுவிட, ஜனனி படுக்கையறை விசயங்களை அவருக்கே தெரியாமல் மொபைலில் வீடியோ எடுத்து ரசித்திருக்கின்றார் ராம்குமார்.



ராம்குமார்

இதுகுறித்து அறிந்த ஜனனி தனது கணவனிடம் சண்டையிட, அவ்வப்போது சச்சரவுகளுடன் காலம் கடந்திருக்கின்றது. திருமணம் ஆகி இருவரும் வேலைக்கு சென்று வரும் நிலையில் பல இரவுகள் ஜனனிக்கு கசப்பாகவே கடந்திருக்கின்றது.

திருமணம் ஆகி 2 வருடம் கழித்து கருவுற்ற ஜனனிக்கு 2019ல் ட்வின்ஸ் 2 குழந்தைகள் பிறந்திருக்கின்றது. குழந்தைகள் பிறந்ததோடு ஜனனியிடம் இருந்து விலகியிருக்க ஆரம்பித்திருக்கின்றார் ராம்குமார். பிறந்த குழந்தைகளோடு ஜனனி தனது அம்மா வசிக்கும் லிங்கநகரில் குழந்தைகளோடு சென்று விட்டார். ராம்குமாரும் அவரது பெற்றோரும் 5 மாதங்கள் கழித்துதான் ஜனனியின் பெற்றோர் வீட்டிற்கு வந்து குழந்தைகளை பார்த்திருக்கின்றனர்.

ஜனனி மருத்துவமனையில் சேர்ந்தபோதே பணி நிமிர்த்தமாக வெளியூர்களுக்கு அடிக்கடி பயணம் கொண்டிருப்பதாக ராம்குமார் சாக்கு போக்கு சொல்லி பல்வேறு பெண்களுடன் உல்லாசமாக இருந்திருப்பது பிறகுத்தான் ஜனனியின் பெற்றோருக்கு தெரிய வந்திருக்கின்றது.

**திருச்சி பகீர்!**

ஜனனி குழந்தைப்பேருக்கு பிறகும் தமது அம்மா வீட்டிலிருந்து புத்தூர் நால் ரோடு அருகே உள்ள ஒரு ஐ.டி.கம்பெனியில் வேலைக்கு சென்றுக்கொண்டிருக்கின்றார். ராம்குமார், ஜனனி சம்பளம் வாங்கும் தேதிக்கு மட்டும் தனது மாமியார் வீட்டிற்கு வந்து ஜனனியுடன் கொஞ்சி குளாவி அவரது சம்பளத்தை முழுவதும் வாங்கிக்கொண்டு சென்று விடுவாராம். சரி புருசன் தானே என ஜனனியும் அப்படியே கொடுத்து விட்டு மற்ற வேலைகளின் கவனம் செலுத்தி வந்திருக்கின்றார்.

இந்தநிலையில்தான் ஜனனிக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டிருக்கின்றது. குழந்தை பிறந்து 6 மாதத்தில் ஜனனிக்கு ரத்த புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டு சிகிச்சைகள் தொடர்ந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த வருடம் மே மாதம் காலமானார். அதற்கு பிறகுதான் ராம்குமாரின் திருவிளையாடல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளி வரத்துவங்கியிருக்கின்றன.

இதுகுறித்து ஜனனியின் அம்மா பிரமிளா தெரிவிக்கையில், "எம் மவலும், மருமகனும் நல்லாத்தான் குடும்பம் நடத்துறாங்கன்னு நாங்க நெனச்சுக்கிட்டிருந்தோம்ங்க. ரயில்வே மாப்ளன்றதால 30 பவுன் போட்டு ஜாமான் எல்லாம் வாங்கி கொடுத்து கல்யாணம் பண்ணி வச்சோம்.


ஒரு நாள் எம்பொண்ணு என்ட்ட என் வீட்டுக்காரர் ராம்குமார் இரவு நேரத்தில என்ன எனக்கு தெரியாமயே பல்வேறு சில வீடியோக்களை எடுத்திருக்காருன்னு சொன்னா., நானும் எதையோ பார்த்துட்டு ஏதோ சொல்லுதுன்னு விட்டுட்டேங்க. அப்புறம் ஒரு நாளு ரொம்பவும் அழுதுட்டே என்ன அசிங்க அசிங்கமா வீடியோ எடுத்துருக்காருன்னு சொன்னா, நானும் போய் மாப்ளயோட பெற்றோரிடமும், மாப்ளகிட்டேயும் கேட்டேன். மழுப்பினாங்க., சரி எல்லாமே கொஞ்ச நாள்ல சரியாகிடும்ன்னு நெனச்சேன்.

மாப்ள ரயில்வேல வேலை பார்க்கிறதால அடிக்கடி வேலை விசயமா வெளியூர் சென்று வந்துக்கிட்டிருந்தாரு. அதேபோல் கண்டோண்மெண்ட் பக்கமா இருக்கற ஒரு ஜிம்முக்கும் அடிக்கடி சென்று வருவாரு. அப்போ தமது உடம்ப பார்துக்கவும், சத்தா சாப்பிடவும் ஆன் லைன்ல பல்வேறு பவுடர்கள ஆர்டர் செய்து வீட்டுக்கு எடுத்து வந்து சாப்பிடுவாறு., அதையே எம்பொண்ணையும் சாப்பிடச் சொல்லி கட்டாயப்படுத்துவாறு.



ஜனனியின் தாய் பிரமிளா

ஆம்பளைங்க ஜிம்முக்கு போறபோது எடுத்துக்கற பல்வேறு ஊக்க பவுடர்கள எம்பொண்ணையும் எடுக்க வச்சதாலத்தான் அவளுக்கு ரத்த புற்றுநோய் வந்திருச்சுன்னுதான் நினைக்கறேன். கல்யாணம் பண்ணி 2 வருசம் கழிச்சு புள்ளயை பெத்து கொடுத்தா, ரொம்ப சந்தோசப்பட்ட நேரத்துலதான் அவளுக்கு உடம்பு சரியில்லாம போனபோது ரத்தம் டெஸ்ட் எடுத்தப்போ புற்றுநோய்ன்னு சொல்லி என் அடிவயித்த கலக்கிட்டாங்க.



அந்த எப்.ஐ.ஆர்.

ரயில்வே சார்பில் அடையார் கேன்சன் இன்ஸ்ட்டிடியூட்ல மருத்துவம் பார்த்தோம். ஸ்டெம் செல் மாத்த சொன்னாங்க என் பையன் கொடுக்க நல்லா உடம்பு தேறிக்கிட்டு வந்துச்சு. மாப்ள வீட்டிலேர்ந்து யாருமே வந்து பாக்கலன்ற வருத்தம் ரொம்பவும் ஜனனிகிட்ட இருந்துச்சுங்க.

உடம்பு முடியாத நிலையில இரட்ட புள்ளைய வச்சுகிட்டு ரொம்ப சிரமப்பட்டோம். சரி சமாளிச்சிகிட்டிருக்கிறப்போதான், ரயில்வே ஆஸ்பட்டல்ல உள்ள டாக்டர் இனி உங்க பொண்ணுக்கு மருத்துவம் பார்க்க முடியாதுன்னு சொன்னாங்க. ஏன்னு கேட்டப்ப, ஜனனியின் கணவரான ராம்குமார் ரயில்வே அலுவலகம் மூலமா ஜனனி மருத்துவத்துக்கு என்னால ஒன்னும் பண்ண முடியாதுன்னு சொல்லி ஆஸ்பட்டல் லிஸ்ட்லேர்ந்து பெயரை நீக்கிட்டாருன்னு சொன்னாங்க.

நாங்க போய் கேட்டப்போ எங்களால உம்பொண்ணுக்கு இனி மருத்துவம் பாக்க முடியாது, நீங்க என்ன வேணா பண்ணிக்கோங்கன்னு எடுத்தெறிஞ்சு பேசி எங்கள அசிங்கப்படுத்திட்டாங்க, அப்புறம், நாங்களும் கொஞ்சம் கடன வாங்கி திரும்ப மருத்துவம் பார்த்தோம். ஆனா இதற்கிடையில தொடர் மருத்துவம் தடை பட்டதால எம்பொண்ணு எங்கள விட்டுட்டு கடந்த மே மாதம் போய் சேர்ந்துட்டா.

மாப்ள அப்பத்தான் வந்தாரு, யாரோ ஒருவர் மாதிரி அவரும் அவங்க வீட்டாரும் ஓரமா நின்னு வேடிக்கை பார்த்து கடந்து போய்ட்டாங்க, நாங்க நேரடியா போய் பார்த்தப்பவும் எங்கள கண்டுக்கல, பின்னர் விசாரிச்சப்போ அவருக்கு வேற திருமணமாயிடுச்சுன்னாங்க., எம்பொண்ணு ஆஸ்பட்டல்ல இருக்கும்போதே இவரோடு 12 வயது மூத்த வேறொருத்திய காசுக்காக திருமணம் செஞ்சிருக்காங்கன்னு கேள்வி பட்டு அதிர்ச்சியடைந்தோம்.

உடனே அவங்க வீட்டுக்கு போணப்ப எங்கல அசிங்கபடுத்தி அனுப்பிச்சிட்டாங்க, அதனால நாங்க எங்க பொண்ணுக்கு போட்ட நகை நட்டு, பாத்திரம் எல்லாம் திருப்பி கேட்டோம். இதுதொடர்பா பொன்மலை போலீஸுக்கு போனோம்.

நாங்களும் விசாரிச்சப்பதான் ராம்குமாருக்கு பல்வேறு பெண்களோட தொடர்பு இருப்பத தெரிஞ்சுக்க முடிஞ்சுது. ஒவ்வொருத்தர்ட்டயும் ஏதாச்சும் சொல்லி காசு பணத்த வாங்கிட்டு வேறு ஒருத்தருக்கு வலை விரிச்சு உல்லாசமா இருந்தத தெரிஞ்சுக்கிட்டோம்'' என்றார் கண்ணீர் மல்க.

ஜனனியின் மரணத்திற்கு பிறகுதான் எங்களுக்குள் பழக்கம் எனச்சொல்லும் ராம்குமாருடன் 2வதாக முறைப்படி திருமணம்

செய்துகொண்ட இந்துமதியும் கசப்பான வாழ்க்கைதான் ஒரே வருடத்தில் எனச்சொல்லி தன்னை ஏமாற்றியதாகவும், தன்னிடம் இருந்து பல லட்சங்களை ராம்குமார் சுருட்டிக்கொண்டு வேறு பல பெண்களோடு தொடர்பில் இருப்பதால் அவன் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து அவனால் வலை விரிக்கப்படும் பெண்களை காப்பாற்றுமாறு ஸ்ரீரங்கம் பெண் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்து கதறியிருக்கின்றார்.

இதுகுறித்து இந்துமதியிடம் பேசியபோது, “எனக்கு திருமணமாகி 2 குழந்தைகள் இருக்கும் நிலையில் என் மனைவி உடல் நலக்குறைவால் இறந்து விட்டாள், குழந்தைகளை நான் பார்த்துக்கொள்வது சிரமமாக இருக்கின்றது எனச்சொல்லி அன்புடன் பேசியதாலேயே ராம்குமார் வலையில் நான் வீழ்ந்துட்டேங்க, எனக்கு அவனை விட வயது கூடன்னு சொல்லியும் என்ன அவன் சமாளிச்சு பேசி கடைசில தாலி கட்டிட்டான். அவன கல்யாணம் பண்ணி கொஞ்ச நாள்லயே அவனோட சுயரூபத்தை என்ட்டயும் காட்டினான். அப்போதுதான் நான் ஆகா ஏமாந்துட்டோமே! என வேதனைப்பட்டேன். ஜனனி அம்மா போலீஸ்ட்ட போன தகவல் தெரிஞ்சதுமே நானும் ஸ்ரீரங்கம் போலீஸ்ல புகார் கொடுத்தேன். புகாருக்கு பெரியளவு ரெஸ்பான்ஸ் இல்லங்க. அதனால நீதிமன்றத்துக்கு போயிட்டேன்.

ஜனனி மாதிரியோ, என்ன மாதிரியோ வேறு எந்தப்பெண்ணும் பாதிக்கக்கூடாதுங்க, அவன் ரயில்வேயில் வேலை செய்வத வச்சுக்கிட்டு பல பெண்கள ஏமாத்திட்டிருக்கான். திருச்சியில வேலை செய்றதால் சொன்னவன் இப்போ விழுப்புரத்தில் இருக்கான்றாங்க. எங்களப்போல எந்த அபலைப்பெண்களும் பாதிக்கக்கூடாதுங்க இதுக்கப்புற” என்றார் கண்ணீருடன்.

ஜனனி அம்மா பிரமிளா மற்றும் ராம்குமாரின் 2வது மனைவியான இந்துமதியின் புகார்கள் குறித்து ராம்குமாரை தொடர்புகொண்டபோது, “இது எங்க குடும்ப பிரச்சனை, நீங்க யாரு? நாங்க பார்த்துக்குவோம் எல்லாத்தையும்” எனச்சொல்லி தொடர்பை துண்டித்தார்.

எது எப்படியோ திருச்சியில் நடந்திருக்கும் இந்த மன்மத லீலை சம்பவங்கள் வெளியே கொண்டுவரப்படுவதில் போலீஸாருக்கும் உடன்பாடு இல்லன்னுதான் தோணுதுங்கறாங்க சட்டமறிந்தவர்கள்! ■


வல்லமை தாராயோ இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே...

தமிழக அரசியல்

பதிப்பாளர் - ஆசிரியர்
JSK.சதீஷ்குமார்

இணை ஆசிரியர்
பி.ரெங்கநாதன்

தலைமை நிருபர்கள்
எம்.ஆர்.ராஜா
பி.சுபாஷ் பாபு
கே.ஆர்.உதயகுமார்
ஆர்.ராஜா மகேஷ்

முதன்மை நிருபர்கள்
கிஷோர்
ஜவஹர்
த.இக்னேஷியஸ்
க.சண்முக வடிவேல்
பி.எம்.கணேஷ்
ம.மு.கண்ணன்

நிருபர்கள்
எம்.நமச்சிவாயம்
பி.சிவமுருகன்
மதுரகவி

வடிவமைப்பாளர்
த.கோபாலகிருஷ்ணன்

சட்ட ஆலோசகர்
A.M.ரவீந்திரநாத் ஜெயபால் M.LM., B.L.

விற்பனைப் பிரிவு
சசி

சந்தா தொடர்பான விவரங்களை அறிய
போன்: 044 - 43511883
tamilagaarasiyalcirculation@gmail.com

எண்: 47, கிரியப்பா ரோடு,
தி.நகர், சென்னை-600017
போன்: 044-43511883
e-mail: newtamilagaarasiyal@gmail.com



கட்டுரையாளர்களின் கருத்துக்கள்
அவர்களின் சொந்தக் கருத்துக்களே.

JSK PRIME MEDIA

எம்.நமச்சிவாயம்

# ரெய்டில் சிக்கிய வேது மாஜி!



**“முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் வருமானத்திற்கு அதிகமாக 11.32 கோடி ரூபாய் சொத்து குவித்துள்ளதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.**

அதிமுக முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் கடந்த அதிமுக ஆட்சியில் உயர்கல்வித்துறை அமைச்சாராக செயல்பட்டார். கே.பி. அன்பழகன் வீட்டில் லஞ்ச ஒழிப்புத்துறை இன்று அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். கே.பி. அன்பழகனின் வீடு மற்றும் அவருக்கு தொடர்புடைய 57 இடங்களில் இன்று லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடத்தி வருகின்றனர்.

வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்குவித்ததாக எழுந்த புகாரில் முன்னாள் அமைச்சர் கே.பி. அன்பழகன் வீடு மற்றும் அவருக்கு தொடர்புடைய இடங்களில் சோதனை நடைபெற்று வருகிறது. சென்னை, தருமபுரி உள்பட தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலும், தெலுங்கானாவிலும் இந்த சோதனை நடைபெற்று வருகிறது. கே.பி.அன்பழகனின் உறவினர்கள், ஆதரவாளர்கள் வீடுகளிலும் சோதனை நடைபெற்று வருகிறது.

திமுக ஆட்சிக்கு வந்த பிறகு, அதிமுக முன்னாள் அமைச்சர்கள் வீடுகளில் தொடர்ந்து லஞ்ச ஒழிப்புதுறை சோதனை நடந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில், அதிமுக முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி வேலுமணி, தங்கமணி, கே.சி வீரமணி, எம்.ஆர் விஜயபாஸ்கர், சி. விஜயபாஸ்கர் ஆகியோரது வீடுகளில் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்குவித்ததாக முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன் மீது வழக்குப்பதிவு


கே.பி.அன்பழகன்

செய்யப்பட்டுள்ளது. வருமானத்தை விட கூடுதலாக 11.32 கோடி ரூபாய் சொத்துக்குவித்ததாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் அமைச்சர் கே.பி.அன்பழகன், அவரது மனைவி மல்லிகா, மகன்கள் சசி மோகன், சந்திரமோகன் மற்றும் மருமகள் வைஷ்ணவி ஆகிய 5 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கே.பி. அன்பழகன் 2016 முதல் 2021 வரை உயர்கல்வித்துறை அமைச்சராக இருந்தபோது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இதுதொடர்பாக கிடைத்துள்ள முதல் தகவல் அறிக்கையில், தர்மபுரியில் உள்ள லஞ்ச ஒழிப்புத்துறை காவல்நிலையத்தில் பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**ரூ.11.32 கோடி சொத்து குவிப்பு!**

6வதாக முன்னாள் அமைச்சர் வீட்டில் ரெய்டு நடந்திருப்பது அதிமுக வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

● பி.ரெங்கநாதன்

## மகளிருக்கு 11 மாநகராட்சிகள்...

# மகளிரணியினர் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவாரா கனிமொழி?

> நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மகளிருக்கு அதிகளவில் இடம் ஒதுக்கப்பட்டதால், தி.மு.க. மாநில மகளிர் அணிச் செயலாளர் கனிமொழி வீட்டில் நிர்வாகிகள் குவியத் தொடங்கியுள்ளனர்.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு எப்போது வேண்டுமானாலும் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், 11 மாநகராட்சிகளை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளதாக இரண்டு நாட்களுக்கு முன்னர் அறிவித்தார் தமிழக அரசின் கூடுதல் முதன்மைச் செயலாளர் ஷிவ்தாஸ் மீனா. அதன்படி சென்னை, தாம்பரம், ஆவடி, கடலூர், திண்டுக்கல், வேலூர், கரூர், சிவகாசி, காஞ்சிபுரம், மதுரை, கோவை, ஈரோடு ஆகிய 11 மாநகராட்சிகளில் பெண்கள் மட்டுமே போட்டியிட முடியும்.

இதேபோல் ஏனைய மாநகராட்சிகளிலும் கணிசமான எண்ணிக்கையில் பெண்களுக்கு வார்டுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனால் ஆண் வேட்பாளர்களுக்கு சரிசமமாக இந்த முறை பெண் வேட்பாளர்களையும் தேர்தல் களத்தில் காண முடியும். இந்தச் சூழலில் வார்டு கவுன்சிலர் தொடங்கி நகராட்சி சேர்மன், துணை தலைவர், துணை மேயர், மேயர் என பல பதவியிடங்களுக்கு இப்போதே காய் நகர்த்தத் தொடங்கியிருக்கிறார்கள் மகளிரணி நிர்வாகிகள்.

அந்த வகையில் அணியின் மாநிலச் செயலாளரும், எம்.பியுமான கனிமொழியை பிடித்தால் அவரது சிபாரிசில் சீட் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடனும், நம்பிக்கையுடனும் அவரை காண ஆர்வம் காட்டத் தொடங்கியிருக்கிறார்கள் மகளிரணி நிர்வாகிகள். இதனால் கனிமொழியின் சிஐடி



கனிமொழி

காலனி இல்லத்தை மீண்டும் பரபரப்பாக காண முடிகிறது. இதனிடையே மேயர், நகரமன்றத் தலைவர் பதவிக்கான தேர்தல் நேரடியாகவா அல்லது மறைமுகவாகவா என்ற விவரம் இல்லை.

கனிமொழியை சந்திக்கும் பெண் நிர்வாகிகள் கூறுவதெல்லாம், கட்சிக்காக உழைத்த தங்களுக்கு உரிய அங்கீகாரம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதேயாகும்.

தி.மு.க. மகளிர் அணியின் கோரிக்கையை கனிமொழி நிறைவேற்றுவாரா... இல்லை அதற்கும் 'ஏதாவது' முட்டுக்கட்டை எழுமா என்பதுதான் எதிர்பார்ப்பாக உள்ளது! ■

● எம்.நமச்சிவாயம்

# உ.பி. - உத்தரகாண்ட்டில் மீண்டும் பா.ஜ.க.!

“ உ.பி.யில் மீண்டும் சமாஜ்வாடி கட்சி வெற்றி பெறுமா? இல்லை, பா.ஜ.க. மீண்டும் ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ளுமா என்ற எதிர்பார்ப்பு இந்தியா முழுவதும் எழுந்துள்ள நிலையில், மீண்டும் உ.பி.யில் பா.ஜ.க. வெற்றி பெறும் என்று கருத்துக்கணிப்புகள் வெளியாகியுள்ளன!

### உத்திரப் பிரதேசம்

உத்தரப் பிரதேசம், பஞ்சாப், கோவா, மணிப்பூர், உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களுக்கான சட்டப்பேரவை தேர்தல் அடுத்த மாதம் நடைபெறவிருக்கிறது. உத்தரப்பிரதேசத்தில் சட்டசபை தேர்தலுக்கான ஓட்டுப்பதிவு, அடுத்த மாதம் 10ல் துவங்கி மார்ச் 7 வரை ஏழு கட்டங்களாக நடக்கவுள்ளது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் 70 தொகுதிகளுக்கும், கோவாவில் 40 தொகுதிகளுக்கும், பஞ்சாபில் 117 தொகுதிகளுக்கும், உத்தரப் பிரதேசத்தில் 403 தொகுதிகளுக்கும், மணிப்பூரில் 60 தொகுதிகளுக்கும் சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. உத்திரப்பிரதேச தேர்தலை நாடே உற்று நோக்கி வருகிறது. உத்திரப்பிரதேசத்தில் ஆளும் பாஜக மீண்டும் ஆட்சியைத் தக்கவைக்க போராடி வருகிறது. அதே சமயம் சமாஜ்வாடி கட்சி அகிலேஷ் யாதவால் பலம் பெற்று வருகிறது. இந்த இரு கட்சிகளுக்குத் தான் போட்டி என்று முடிவாகிவிட்டது. அடுத்த முதல்வர் அகிலேஷ் யாதவா அல்லது யோகி ஆதித்யநாத்தா என்று கருத்துக் கணிப்புகள் நடைபெற்று வருகின்றன.

உத்தரப் பிரதேச மாநிலத்துக்கான தேர்தல் கருத்துக்கணிப்பு முடிவுகள் வந்துகொண்டிருக்கின்றன. கடந்த வாரம் ஏபிபி சிவோட்டர் கருத்து கணிப்பு ஒன்றினை வெளியிட்டது. அதில், பாஜக 223 முதல் 235 இடங்களைப் பிடிக்கும் என்று தெரிவித்திருக்கிறது. இந்தியா டிவி கருத்து கணிப்பில், பாஜக 230 - 235 தொகுதிகளில் வெற்றி பெறும் என்றும், அகிலேஷ் யாதவ் கட்சி 160 - 165 தொகுதிகளில் வெற்றி பெறும் என்றும் கணித்துள்ளது. ரிபப்ளிக் டிவி நடத்திய கருத்துக் கணிப்பிலும் பாஜகவே மறுபடியும் ஆட்சியமைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை உத்தரப்பிரதேச தேர்தலுக்கான வந்துள்ளக் கருத்துக்கணிப்புகளில் காங்கிரஸ் கட்சி மிக மோசமான நிலையில் இருப்பதையே உணர்த்தியுள்ளன. இரண்டு இலக்கங்களில் வெற்றி பெறுவதே சிரமம் என்றும் இந்த கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது. அதிகபட்சமாக காங்கிரஸ் கட்சிக்கு ஏழு தொகுதிகளில் வெற்றி கிடைக்கலாம் என்று தெரியவந்துள்ளது. இந்தநிலையில், உத்தரப்பிரதேசத் தேர்தலுக்கான இந்தியா டிவி கருத்துக் கணிப்பு வெளியாகி இருக்கிறது. இந்தத் தேர்தலில் பாஜக வெற்றி பெற்று இரண்டாவது முறையாக ஆட்சி அமைக்கும் என்று தெரிவித்துள்ளது. உத்தரப்பிரதேச்த்தில் மொத்தம் உள்ள 403 தொகுதிகளில் 230 முதல் 235 தொகுதிகளைக் கைப்பற்றும் என்று கருத்துக்கணிப்பு தெரிவித்திருக்கிறது.


அமித்ஷா – மோடி

சமாஜ்வாதி கட்சி 160 முதல் 165 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று தெரிவித்துள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு 3 முதல் 7 தொகுதியும், பகுஜன் சமாஜ் கட்சி 2 முதல் 5 இடங்களைக் கைப்பற்றும் என்றும் இந்தியா டிவியின் கருத்துக் கணிப்பு தெரிவித்துள்ளது. மேலும், கோரக்பூரில் போட்டியிடும் முதல்வர் யோகி ஆதித்யநாத் மீண்டும் வெற்றி பெறுவார் என்றும் தெரியவந்துள்ளது.

### உத்தரகாண்ட்

உத்தரகாண்ட் மாநிலத்தில் பாஜக ஆட்சி செய்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் பாஜகவின் 3வது முதல்வராக புஷ்கர் சிங் தாமி பதவி வகித்து வருகிறார்.

உத்தரகாண்ட் பாஜகவில் உட்கட்சி பூசல் கொடிகட்டிப் பறக்கிறது. இதனாலேயே அடுத்தடுத்து மாநில முதல்வர்களை மாற்ற வேண்டிய நெருக்கடி பாஜக மேலிடத்துக்கு ஏற்பட்டது. பாஜகவின் உட்கட்சிப் பூசல்களால் ஆட்சியை அக்கட்சி இழக்கும் என கணிக்கிறது காங்கிரஸ். அண்மையில் அமைச்சர் ஹராக் சிங் ராவத் பாஜகவில் இருந்து நீக்கப்பட்டார். பாஜகவில் மருமகளுக்கு சீட் கேட்டு வாய்ப்பு மறுக்கப்பட்டதால் அவர் கலகக் குரல் எழுப்பினார். இதனையடுத்து பாஜகவில் இருந்து நீக்கப்பட்ட அவர் காங்கிரஸில் சேர உள்ளார்.



யோகி ஆதித்யநாத் – அகிலேஷ் – மாயாவதி – பிரியங்கா

**–கருத்துக் கணிப்பில் தகவல்**

ஆனால் காங்கிரஸ் கட்சியில் பாஜகவைவிட மிக மோசமாக உட்கட்சி பூசல் வெடித்திருக்கிறது. அம்மாநில முன்னாள் முதல்வர் ஹரீஷ் ராவத், தம்மை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க கோரி அண்மையில் கலகக் குரல் எழுப்பி இருந்தார். இந்த நிலையில் உ.பி.யில் பாஜக ஆட்சியைத் தக்க வைக்கும் என்கின்றன கருத்து கணிப்புகள்.

ரிபப்ளிக் டி.வி, பி.எம்.ஏ.ஆர்.கியூ இணைந்து நடத்திய கருத்து கணிப்பில் உத்தரகாண்ட்டில், பாஜக 36 முதல் 42 இடங்களைக் கைப்பற்றும். காங்கிரஸ் 25 முதல் 31 இடங்களில் வெல்லுமாம். ஆம் ஆத்மி கட்சிக்கு அதிகபட்சம் 2 இடங்கள் கிடைக்கும் என்கிறது கருத்து கணிப்பு. இதர கட்சிகளுக்கு 1 முதல் 3 இடங்கள் கிடைக்குமாம்.

வாக்கு சதவீதத்தைப் பொறுத்தவரையில் பாஜகவுக்கு 39.9%; காங்கிரஸுக்கு 37.5%; ஆம் ஆத்மி கட்சிக்கு 13.1% வாக்குகள் கிடைக்கும். இவ்வாறு கருத்து கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உத்தரகாண்ட் மாநிலத்தில் மொத்தம் 70 தொகுதிகள் உள்ளன. அனைத்து இடங்களுக்கும் ஒரே கட்டமாக பிப்ரவரி 14ந் தேதி தேர்தல் நடைபெறுகிறது. வாக்குகள் அனைத்தும் மார்ச் 10ல் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

அதே போல் பஞ்சாபில் ஆளும் காங்கிரஸ் மீது மக்கள் கடும் அதிருப்தியில் இருப்பதால், பா.ஜ.க. வெற்றி பெற வாய்ப்பிருப்பதாக அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். கோவா, மணிப்பூரிலும் பா.ஜ.க. வெற்றி பெற வாய்ப்பிருப்பதாக கருத்துக்கணிப்பில் தகவல்கள் வெளியாகியிருக்கிறது.

ஐந்து மாநிலத் தேர்தல் முடிவுகள் பி.ஜே.பி. சாதகமாக இருப்பதாகவே தகவல்கள் வருவதால், அக்கட்சியினர் உற்சாகமாக தேர்தல் பணியாற்றி வருகின்றனர். ■




✉ பரமசிவம், தாராபுரம்.

**டெல்லியில் நடைபெறும் குடியரசு தின நிகழ்ச்சியில், தமிழக அரசின் ஊர்திக்கு அனுமதி வழங்கப்படாதது சர்ச்சையை கிளப்பியிருக்கிறதே?**

இது தொடர்பாக பாதுகாப்புத்துறை அமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார். அதற்கு, ' குடியரசு தின அணிவகுப்பில் இடம்பெறும் அலங்கார ஊர்திகள் குறித்து நிபுணர் குழுவின் பரிந்துரை அடிப்படையிலேயே முடிவு எடுக்கப்படுவதாக' மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். முதல் 3 சுற்றுகள் வரை தமிழக ஊர்தி பரிசீலனையில் இருந்தது. இறுதிச்சுற்று பட்டியலில் தமிழகத்தின் அலங்கார ஊர்திகள் இடம்பெறவில்லை என்றும் விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

*****

✉ டி.ஜெய்சிங், கோயம்புத்தூர்.

**ஐந்து மாநில தேர்தலில் பாஜக பலமிழந்துதான் காணப்படுகிறதா?**

பொதுவாக சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்தளவில் ஆளுங்கட்சியின் மீது கொஞ்சம் அதிருப்தி இருக்கத்தான் செய்யும். ஆனால், அதையும் மீறி மீண்டும் ஜெயித்த வரலாறு உண்டு. எனவே, மக்கள் மனதில் என்ன இருக்கிறது என்பதை தேர்தல் முடிவில்தான் தெரிந்துகொள்ள முடியும். ஏனென்றால் சில நேரங்களில் கருத்துக்கணிப்புகளும் பொய்த்துப் போய்விடுகிறதே..?

*****

✉ டி.ஜே.தனபாலன், நஞ்சுண்டாபுரம்.

**எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி செயல்பாடு எப்படி உள்ளது?**

ஆளுங்கட்சியாக இருந்தபோதே, பல்வேறு தடைகளை தகர்த்து, குறைந்த நாட்களில் தனக்கான தனித்துவத்தை பதித்தவர். எதிர்க்கட்சித் தலைவருக்குரிய பணியை, அவரது பாணியில் செய்துவருகிறார்!

*****

✉ கணேசன், ஜாபர்கான்பேட்டை.

**அலங்காநல்லூரில் நடந்த ஜல்லிட்டு விழாவில், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் சசிகலாவின் காளை என்று விழாக்குழுவினர் அறிவித்திருக்கிறார்களே..?**

யார் பொதுச்செயலாளர் என்பதை முடிவு செய்வது நீதிமன்றம்... ஜல்லிக்கட்டுக் குழுவினர் முடிவு செய்ய அதிகாரம் இல்லை. யதேச்சையாக சொல்லியிருக்கலாம். இதையெல்லாம் அரசியலாக்க சிலர் முயற்சித்து வருகிறார்கள் - அவ்வளவுதான்!

*****

✉ பாஸ்கரன், திருச்செந்தூர்.

**கொரோனாவால் 16 கோடி மக்கள் வறுமை கோட்டுக்கு கீழ் வந்துள்ளதாக தகவல் வெளியாகியிருக்கிறதே..?**

கொரோனாவால் வறுமை கோட்டுக்குகீழ் தள்ளப்பட்ட 16 கோடி மக்கள் சுவிட்ஸர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் நடைபெற்ற டாவோஸ் அஜெண்டா மாநாட்டில் ஆக்ஸ்பாம் இன்டர்நேஷனல் அமைப்புதான் இந்த பகீர் தகவலை வெளியிட்டது. கடந்த இரண்டு ஆண்டுகள் கொரோனா தாக்கம் காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்ட உலகளாவிய ஏழை மக்கள் குறித்த இந்த தகவல்

Published & Printed by **JSK. SATISHKUMAR,** On behalf of JSK Publications from No 47, Giriappa Road, T.Nagar, Chennai - 600017 and printed at JSK Printer, T.Nagar, Chennai - 600 017.
Editor : **JSK. SATISHKUMAR**



✉ ராஜதுரை, கண்ணனூர்.

**நடிகர் தனுஷ் – ஐஸ்வர்யா இருவரும் பிரிந்துவிட்டார்களே..?**

பொதுவாகவே குடும்ப வாழ்க்கையில் விட்டுக்கொடுத்துப் போனால்தான், நிம்மதியாக, சந்தோஷமாக குடும்பம் நடத்த முடியும். அதுவும் சினிமாவில் இருப்பவர்களைப் பற்றி சொல்லவே வேண்டாம். 18 வருட வாழ்க்கைக்கு 'திடீர்' முற்றுப்புள்ளி வைத்திருப்பதுதான் ரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

*****

இணையத்தில் வைரல் ஆகியுள்ளது.

வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் மக்களில் 4 பெண்களில் ஒருவர் மரணம் அடைவதாகவும் ஒரு நாளில் 20 ஆயிரம்பேர் இதுபோல மரணம் அடைந்ததாகவும் இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. இந்த மரணங்களுக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. மருத்துவ வசதியின்மை, பாலினம் சார்ந்த வன்முறை, பசி பட்டினி, காலநிலை மாற்றம் உள்ளிட்ட பல காரணங்களால் கிட்டத்தட்ட 16 கோடி பேர் வறுமை கோட்டுக்கு கீழ் தள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்திருக்கிறது.

*****

✉ காசிராஜன், பரமத்தி.

**கல்லூரி செமஸ்டர் தேர்வுகள் தள்ளி வைக்கப்பட்டதால், வேலைக்கு சேர்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக மாணவர்கள் வேதனை தெரிவித்திருக்கிறார்களே?**

கடந்த இரண்டு ஆண்டுகளாக மக்களின் இயல்பு வாழ்க்கையையே புரட்டிப் போட்டுவிட்டது கொரோனா. இதில் கல்லூரி மாணவர்களும் விதிவிலக்கல்ல. அண்ணா பல்கலையின் சென்னை வளாகத்தில் மட்டும், பல்வேறு தனியார் பெரு நிறுவன பணிகளுக்கு, கேம்பஸ் இன்டர்வியூ எனப்படும், வளாக நேர்காணல் வாயிலாக, இறுதி ஆண்டு படிக்கும் 1,700 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். கடந்த நான்கு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கணினி தொடர்பான நிறுவனங்கள், அதிக அளவில் மாணவர்களை வேலைக்கு தேர்வு செய்துள்ளன.ஆனால், 2021 டிசம்பர் மாத செமஸ்டர் தேர்வுகளே இன்னும் நடக்கவில்லை. இதன்பின், நான்காம் ஆண்டு அல்லது இன்ஜினியரிங்கில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவர்களுக்கு, இறுதி செமஸ்டர் தேர்வு ஏப்ரலில் நடத்தப்பட வேண்டும்.அப்போது தான், விடைத்தாள்கள் திருத்தப்பட்டு ஜூன், ஜூலையில் மாணவர்கள் பட்டம் பெற முடியும். அதன்பின், அவர்கள் தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்துக்கு பணிக்கு செல்ல வேண்டும்.வேலைக்கு தேர்வு செய்யும் நிறுவனங்கள், தங்களின் வேலைவாய்ப்பு உத்தரவை வழங்கும் போதே, ஆகஸ்டுக்குள் பட்டம் பெற்று, வேலையில் சேர்ந்து விட வேண்டும் என்ற, உத்தரவாதம் கேட்கும். தற்போது கொரோனா பரவலால், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க முடியாமல் போவதுதான் மாணவர்களுக்கு கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

*****

✉ ராமசாமி, லத்தூர்.

**வரும் சட்டமன்றத் தேர்தலில் பா.ம.க. எந்தக் கட்சியுடனும் கூட்டணி வைக்காமல் தனித்துப் போட்டியிடும் என்று அறிவித்திருக்கிறதே... தனித்துதான் போட்டியிடுமா..?**

வரும் சட்மன்றத் தேர்தலின் போது 'என்ன நடக்கிறது' என்பதை பாருங்கள்... அதுவரை பொறுத்திருங்கள்!

*****

Registered with the Registrar of Newspapers for India under RNI No. TNTAM/2008/27080
Day of Publishing : Every Friday

தமிழக அரசியல்
வார இதழ்
தினசரி செய்திகள்

ஆலயம்
ஜோதிடம்
ராசி பலன்கள்

சிங்கப் பெண்ணே....
(சாதனைப் பெண்கள்)
அழகு குறிப்புகள்
ஆடை, ஆபரணம்
சமையல்

அலோபதி
ஆயுர்வேதம்
சித்தா

தொடர் கதைகள்
சிறு கதைகள்
கவிதை தொகுப்பு
கார்ட்டூன்
கல்வி
மற்றும் பல...

புதிய திரைப்படங்கள் நேரடி வெளியீடு
500-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள்
சினிமா செய்திகள்
பாடல்கள்
நகைச்சுவை

JSK PRIME MEDIA
Mobile App

அத்தனையும் ஒரே App-ல்...

Available on amazon appstore Fire TV
GET IT ON Google Play
Download on the App Store
Available on Windows Store
SMART TV

விரைவில்...
Amazon Fire TV
ஆன்ட்ராய்டு
iOS
மற்றும்
விண்டோஸ்
தளங்கள்
ஸ்மார்ட்
டிவிக்களில்...

JSK PRIME MEDIA
தமிழக அரசியல்
புதியதோர் உலகம் செய்வோம்
உடனுக்குடன் செய்திகள்...
புதிய திரைப்படங்கள் நேரடி வெளியீடு...
500-க்கும் மேற்பட்ட திரைப்படங்கள்...
இன்னும் பல சிறப்புகளுடன்...

@JskPrime
JSK Prime Media
JSK Prime Media
For Details: +91 70107 25001

Advt